ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 7
ஆவணி 1-31
2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் 7 ஆவது இதழ் வாயிலாக வாசகர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி...


நாங்கள் பத்திரிகை ஓர் ஆவணப்பத்திரிகை என்பதை வாசகர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் மீள ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன். செய்திப் பத்திரிகைக்கும் ஆவணப் பத்திரிகைக்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. நாங்கள் ஆவணப்பத்திரிகைக்கு உரிய விதிமுறைகளுக்கு அமைவாகவே பயணிக்கும். இந்த பத்திரிகையை வெளியீடு செய்யும் நாங்கள் மூவரும் இலக்கியத்துறையிலும் தொழில்துறையிலும் தொடர்ந்து செயற்பட்டு வருபவர்கள். எங்கள் மக்களை, எங்கள் ஊரை, எமது முதுசங்களை ஆவணப்படுத்த வேண்டும், எதிர்காலத்தில் மறக்கப்படாது ஓர் ஆவணமாக இருக்க வேண்டும் என்ற நல் நோக்கம் ஒன்றே இப்பத்திரிகையின் வரவிற்கான காரணம். பலரது வீடுகளுக்கு நாங்கள் பத்திரிகையை கொண்டு வந்து கொடுத்து உடனடியாகவோ அல்லது பின்னரோ பணத்தை பெற்று வருகின்றோம். உற்பத்தி செலவின் அரைவாசியே பத்திரிகைக்குரிய பணமாக பெற்று சேவை நோக்கிலேயே இப்பத்திரிகையை வெளியீடு செய்கின்றோம். அண்மை யில் ஒரு வீட்டிற்கு எமது ஆசிரியர்களில் ஒருவர் நாங்கள் – இதழ் 6 இனை விற்கச் சென்ற போது, முகத்தில் அடித்தாற் போல் "எங்களுக்கு வேண்டாம் இங்கு கொண்டு வரவேண்டாம்" எனச் சொல்லப்பட்டது. குறித்த வீட்டில் இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறான கசப்பான சம்பவங்கள் காரணமாக இனி வரும் காலங்களில் வீடு தேடி வந்து பத்திரிகையை கொடுக்க மாட்டோம். தேவைப்படுவோர் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு அல்லது குறித்த எமதூர் கடைகளில் பத்திரிகையை பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாது போயின் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வீர்களானால் உங்கள் வீடு தேடி வந்து தருவோம். இந்த பத்திரிகை வெளியீடு என்பது எந்த விதமான ஆதாயத்தையும் வேண்டி நாம் செய்யும் காரியம் அல்ல. இந்த பத்திரிகையை வெளியிட நாம் செலவிடும் நேரத்தை எமது தொழில்துறை யில் அல்லது இலக்கியத்துறையில் செலவிட்டால் அதில் நாம் அடையும் பேறுகள் தனிப்பட்ட எமது வளர்ச்சிக்கு உரியவை. ஆனால் நாங்கள் மூவரும் எம்ஊரவர்களுக் காக "நாங்கள்" ஊடாக பயணிக்கின்றோம் என்பதை மீளவும் உங்களுக்கு நினைவு படுத்திக் கொள்கின்றோம். ஆக்கங்களை அனுப்புபவர்கள் இந்த பத்திரிகையின் நோக்கத்தை அறிந்து கொள்ளுங்கள். எம்மைப் பற்றிய பாராட்டு கவிதைகள் தயவு செய்து அனுப்ப வேண்டாம், அவை பிரசுரமாகாது. மேலும் என்றும் நாங்கள் உங்களுக்காக பயணிப்போம்.

– க.பரணீதரன்

**கல்வியே எங்களை உயர்விக்கும்...**

## உள்ளே...

1. நினைவுகளை நிஜமாக்கிய பார்த்த!!! சாரதி
அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்கள்



2. அல்வாய் கிருச்சியால் அண்ணமார் ஆலயம்

3. அது ஒரு காலம் – 7
தச்சனொல்லை பனையும் எங்களின் அசாத்தியத்துணிவும்

4. அல்வாய்க்கிராமத்தில் பிறந்து அரியாலைக் கிராமத்திற்கு புகழ்சேர்த்த மூதறிஞர் கவிஞர் க.வே.ஐயாத்துரை



5. முள்ளாவத்தை கேவோலை(கேவத்தை) குறிச்சிகள் இணைந்த "வேல்ஸ்" ஏிறபந்தாட்ட மகளிர் அணி

6. வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தில் அல்வாய "மனோகராவின்" மூலவேர் :
அல்வாய் க.வேலுச்சோதிடர்

7. கலைத்துவம் – கவித்துவம் – கல்வித்துவம் கொண்ட ஓர் ஆளுமைப் பிரவாகமே அமரர் பவானி பிரபானந்தன்



8. அஞ்சலி
அமரர் சி.மதியழகன்
அமரர் செல்வரத்தினம் ஶ்ரீஸ்கந்தராசா
அமரர் மயிலு இராசரத்தினம்

9. மூன்றாம் பனையடி "ஏ" ரீம்


10. குறிச்சி – 4 – இயவராந்தோட்டம்

11. எனது கிராமம் அல்வாய்

12. மீள் பிரசுர நம்மவர் கவிதைகள்
செல்வரத்தினம் அனுஷா
நடேசு செல்வரத்தினம்
வே.ஐயாத்துரை
பவானி பிரபானந்தன்

16. மற்றும் பல செய்திகள்...

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# நினைவுகளை நிஜமாக்கிய பார்த்த!!! சாரதி அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்கள்

■ செல்வராசா அட்ஜெயலிங்கம் (ஆசிரியர்)


பள்ளத்தை நோக்கி பயிர் செய்யும் ஏராளர் ஆகிய எம் குலத்தவர்கள் விவசாய நிலப்பிரபுக்களால் ஓரம் தள்ளப்பட்டு ஒதுங்கிக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களாக சரணடைந்த நிலத்தில் பனை வளம் கண்டு அதனையே தமது ஜீவனாம்சமாக்கி சரித்திரத்தை மாற்றி எழுதிய வரலாற்று நாயகர்கள், இவர்கள் எமது அல்வாய்க் கிராமத்தின் மைல் கற்கள் என்றால் அது மிகையாகாது. இவர்களால் தான் பார் போற்றும் கற்றறிந்த மேலோங்கும் சமூகமாக எமது சமூகம் ஏனைய சமூகத்தவரிடையே பேசப்படுகிறது. இந்த வரலாற்று மாமனிதர்களை ஆவணப்படுத்தும் தம்பி பரணீதரன் அவர்களுக்கும் நாங்கள் பத்திரிகைக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கிறேன்.

தனி மனிதன் குடும்பமாகின்றான். குடும்பங்கள் குறிச்சியாகின்றன. குறிச்சிகள் கிராமமாகின்றன. எமது ஊரில் ஒவ்வொரு குறிச்சியினுடைய முன்னேற்றகரமான வாழ்க்கை முறைதான் எமது கிராமத்தின் உயர்ச்சி. அந்தவகையில் அல்வாய் கிராமத்தின் குறிச்சிகளில் ஒன்றான உல்லியவத்தைக் குறிச்சியின் "பழனிப்பதி"யின் வரலாறு கூறும் நாயகர்களில் ஒருவராகிய அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்களின் நினைவுகளை நிஜமாக்கிய வாழ்வியல் தடங்களைப் பதிவிடுகின்றேன்.

இவர் எமது கிராமத்தின் இணைந்த இடமான துன்னாலை தெற்கு குருக்கட்டு எனும் இடத்தில் 1925ம் ஆண்டு ஆடிமாதம் 21ம் திகதி பிறந்தார். தந்தையார் சின்னத்தம்பி கதிர்காமு தாயார் சின்னப்பிள்ளை இவர்களின் இளைய மகன் ஆவார். இவர் உடன் பிறந்தோர்கள் அமரர்கள் பொன்னையா(மந்தடி) சீனித்தம்பி (உல்லியவத்தை) முத்துப்பிள்ளை (குருக்கட்டு) இலட் சுமிப்பிள்ளை (குருக்கட்டு) சின்னத்தங்கம்(குருக்கட்டு) ஆகியோர்கள். இவர் தனது கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றுக் கொண்டார். இடைநடுவில் தனது கல்வியை நிறுத்திக்கொண்ட இவர் எமது பிரதேச வாழ்வாதாரத் தொழிலை தனது தொழிலாகக் கொண்டு சிறப்புக் கண்டார்.

சங்கரன் வழி வந்த பழனி(உல்லியவத்தை) செல்லப்பா (மூன்றாம் பனையடி) குழந்தை(இயவராந்தோட்டம்) பொன்னம்மா மாணிக்கம் (கிருச்சியால்) இவர்களில் பழனியும் வேலன் வழிவந்த மாரிமுத்து (கிளிவெட்டி) சீனிமுத்து(புதுவீடு) மண்டலம்(மயிலிட்டி) தம்பிமுத்து(குருக்கட்டு) முத்துப்பிள்ளை பொன்னையா(உல்லியவத்தை) சின்னக்குட்டி (உல்லியவத்தை) இவர்களில் சின்னக்குட்டியும் இணைந்த இல்லறத்தின் பேறாக 1946இல் பழனி சின்னக்குட்டி தம்பதிகளின் மூத்த மகளான நல்லம்மாவைக் கரம் பிடித்தார். நல்லம்மாவின் உடன் பிறந்தவர்கள் அமரர்கள் சபாரத்தினம், நவரத்தினம், திருமதி.சரஸ்வதி செல்வராசா ஆவார்கள்.

இவர் தமது வாழ்வாதார தொழிலாக எமது பிரதேச தொழிலினை செய்ததுடன் மட்டும் நின்று விடாமல் வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் எமது பிரதேச மக்களின் நலன் கருதியும் EY 4698 எனும் இலக்கமுடைய சோமர்செற்(somer set) கார் ஒன்றினை வைத்து மக்களிற்கு சேவை செய்தார். எமதூர் மக்கள் மட்டுமல்ல அயல் கிராமத்தை சேர்ந்த மக்களும் இவரின்



சேவையினைப் பெற்று வந்தனர். இந்தப் பிணைப்பினால் அயலூர் மக்கள் எல்லோரும் இவரை மாமா என்று அன்பு முறை கொண்டு அழைத்தனர். தனது வருமானத் தொழில் என்று சொல்வதை விட அதனை யொரு சேவையாகவே செய்தார் என்றே சொல்லலாம். தனது மோட்டார் காரின் துணையால் உறவினர்களை கதிர்காமக்கந்தனிடம் அடிக்கடி அழைத்துச் செல்வது வழக்கம். இதே போன்று திருக்கோணேஸ்வர நாதனிடமும் அதிக பக்தி கொண்டு அங்கும் அடிக்கடி காரில் செல்வது வழக்கம். பயணம் செல்லும் போதெல்லாம் உறவினர்களையும் தம்முடன் அழைத்துச் செல்வார். அத்தோடு வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றிச் சென்று அவர்கள் பற்றிய தகவல்களை வீட்டில் வந்து உரியவர்களிற்கு சொல்வதும் வழக்கம். இப்படியாக வாழ்ந்து வந்த இவர்களிற்கு பிள்ளைச் செல்வம் மிகவும் நீண்ட காலமாக இல்லாது இருந்து வந்தமை ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்தது.


திருமணமாகி நீண்ட காலமாக பிள்ளைகள் இல்லாது இருந்தாலும், ஒரே வீட்டில் வாழும் குடும்பங்கள் எவ்வளவு ஒற்றுமையாகவும் அன்பாகவும் பண்பாகவும் வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமானார். சகலன் முறை கொண்ட எனது தந்தையார் செல்வராசா அவர்கள் ஓர் அரச உத்தியோகத்தர். எனது பெரிய தந்தையார் அவர்கள் தினசரி வருமானம் பெறும் ஒரு சுய தொழிலாளி. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை யில் இது ஒரு முக்கியமான புள்ளி. எப்படியென்றால் தினசரி வருமானமும் மாத வருமானமும் பெறுபவர்கள் எப்படியான வாழ்கையை இணைந்து வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டானார்கள். எனது தாயார் திருமண மாகி ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் வரை அவர்களிற்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கப் பெறவில்லை. தங்கள் பெறா மக்கள் ஐவரையும் தம் பிள்ளைகள் போல் அன்பு பாராட்டி சீராட்டி வளர்த்தார்கள். ஏன் இதனைக் கூறுகின்றேன் என்றால் இரத்த பந்தம் இல்லாத ஒருவர் இப்படியும் செயற்படுவாரா என்பதை வரும் சமூகம் அறியும் முகமாகத் தான் இவற்றைப் பதிவிடுகின்றேன். தற்காலத்தில் உடன் பிறந்தவர்களே ஏற்றுக் கொள்ளாத ஒரு வாழ்க்கை முறையை எம் முன் தலைமுறையினர் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதனை வரும் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே என் நோக்கம்.

இவ்வாறு வாழும் காலத்தில் இவர்களுடைய கடவுள் பக்தியும் நேர்மையான வாழ்க்கை முறையும் மருத்துவம் சாதிக்க முடியாததை நம்பிக்கையான வாழ்வு சாதித்தது என்றே சொல்வேன். ஆமாம் 23 ஆண்டு களின் பின்னர் ஒரு கையில் 6 விரல்களுடன் ஒரு மகனைப் பெற்றெடுத் தார்கள். இத்தனை ஆண்டு காலம் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையில் கிடைத்த செல்வத்தின் பேறாக ஆலயங்கள் தோறும் பல நேர்த்திகளையும் பூஜை களையும் செய்தார்கள். தங்கள் மகனின் பிறந்த தினத்தைக் கூட அந்த காலத்தில் எமது ஆலடியான் சன்னிதானத்தில் ஒரு விழாவாகவே செய்து மகிழ்ந்தார்கள். கதிர்காமக் கந்தனின் அருளை நினைத்தும் தனது தந்தை யாரின் பெயரை இணைத்தும் தங்கள் மகனிற்கு கதிர்காமநாதன் என்ற நாமத்தை சூட்டி மகிழ்ந்தார்கள்.

குழந்தை கிடைத்த ஆனந்தத்தில் தேவரையாளி கண்ணகை அம்மன் வாசலிலே நாடக நிகழ்வொன்றையும் அரங்கேற்றினார்கள். தேவரையாளி கண்ணகைத் தாயின் மீது அதிதீவிர பக்தி கொண்டு திங்கட்கிழமை தோறும் விரதத்தை அனுஷ்டித்து வாழ்ந்தவர்கள். எம் பால கணபதி வீதி உலா வருவதற்கு சகடை ஒன்றை செய்யும் நேர்த்தியினையும் கொண்டு இருந்தனர். அதற்கான ஆரம்ப முயற்ச்சிகள் 70ஆம் ஆண்டு காலத்தில் எடுக்கப்பட்டு அது தடைப்பட்டு போயின. மீண்டும் 1986.01.01 அன்று எமது உல்லியவத்தை இடத்தில் இருந்து ஆலடியானை நோக்கி சகடை அமைத்து வெள்ளோட்டம் செய்து வெற்றியும் கண்டார். இந்த சகடை யில் அடுத்த வருடம் சிறிய கட்டுத் தேர் ஒன்றினை தங்கள் திருவிழா உபயகாரர்களுடன் இணைந்து உருவாக்கி ஆலடியான் வீதியிலே எம்



பெருமானை தேரிலே ஆரோகணிக் கச் செய்தார். இவ்வாறு தன் மனதில் தோன்றிய எண்ணங்களை ஈடேற்றிக் கொண்டிருந்தார். தேரில் ஆரோகணிப்பதற்கு பஞ்சமுக விநாயகர் ஒன்று வேண்டும் என நினைத்து தனது மகன் கதிர்காம நாதன் மூலம் 2000ஆம் ஆண்டு அதனையும் ஆலடியானிற்கு உப கரித்தார். தனது வாழ்நாள் காலங் களில் ஆலடியான் முகாமையாள ராக இருந்து நீண்டகாலப் பணிகளை ஆற்றி வந்தார். உதைபந்தாட்டம் என்றால் தீவிர இரசிகன். அதற்காக தனது வாகனத்தை பெரிதும் பயன் படுத்தியதாக பல உறவினர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். பிரச்சினைகள் சர்ச்சைகள் ஏற்படும் போது முன்னின்று அவற்றிற்கு முகம் கொடுக்க ஒருபோதும் பின்னிற்பதில்லை. ஏனென்றால் அவர் அநீதிகளைக் கண்டு கொதித் தெழும் “கிருஷ்ணன் பிள்ளை



அல்லவா” இவ்வாறு தான் வாழும் காலத்தில் எத்தனையோ சிறப்புக்களைக் கண்டவர் நீண்டகாலம் காத்திருந்து கிடைத்த மகனை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்க வைத்து யா/ஹாட்லிக் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர் கல்வியைக் கற்க வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு கணிதப் பிரிவில் BSc பட்டப் படிப்பினைப் படிப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கும் அனுப்பி வெற்றி கண்டவர். அதே காலப்பகுதியில் மக்கள் வங்கியில் நிரந்தர நியமனம் கிடைத்ததால் அதனை நிரந்தரமாக்கிக் கொள்ள மகனிற்கு வழி வகுத்தவர். ஆண்பிள்ளையாக இருந்த போதும் தன் மகனிற்காக சொத்து, வீடு மனை போன்ற அனைத்தையும் தேடிக் கொடுத்தது மட்டு மன்றி தமது சொந்த மருமகளான நவரத்தினம் உமா அவர்களை திருமணம் செய்து கொடுத்து அதன் பேறாக துவாரகா, கிருஷானந், துஷாரகா என மூன்று பேரப்பிள்ளைகளை யும் கண்டு மனைவி மக்கள் பேரப் பிள்ளைகள் உறவினர்கள் என சுற்றம்சூழ மிகவும் சிறப்பாக வாழ்ந்து வந்தார். தன் வாழ்வில் எண்ணிய நினைவுகளில் தனது இறுதிக் காலத்தில் ஆலடியான் வீதியிலே சித்திரத்தேர் ஒன்று ஓட வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப் படுத்தத் தொடங்கினார். அதற்காகப் பல முயற்சிகளை யும் மேற்கொண்டார். ஆனால் தேர், இராஜகோபுரம் போன்றவை ஆலயத்தில் தனி உபயமாக இருப்பதை விட பொது உபயமாக இருப்பதே சிறப்பு என்ற எமது குடும்ப உறுப்பினர்களின் முடிவிற்கமைய அவரின் இந்த எண்ணம் தடைப்பட்டது. ஒன்பதாம் திருவிழாவாகிய தேர்த் திருவிழாவின் விழாத் தலைவ ராக இறுதி வரை இருந்து தன்னுடைய சொந்த பந்தங்களுக்கு வழிகாட்டியாகி தனது 79ஆவது வயதில் 03.10.2004 அன்று இறைபதம் அடைந்தார், மாயவனின் பக்தனான துவாரகையின் தலைவன் கிருஷ்ணபிள்ளை.

தந்தையின் நினைவை நிஜமாக்கும் முகமாக மகன் கதிர்காமநாதன் அவர்கள் எம்மூர் மக்களின் பெரும் பங்களிப்புடன் 2010 இல் ஆலடியானிற்கு சித்திரத் தேர் அமைத்ததோடு பெற்றோர் நினைவாக தேர் ஆரோகண மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்திருக்கின்றார். எமது அல்வாய் கிராம வரலாற்றில் கதிர்காமு கிருஷ்ண பிள்ளை அவர்களிற்கும் ஒரு தனியிடம் உண்டு என்பது வெளிப்படை. இறுதியாக ஒன்று மட்டுமே நினைவிற்கு வருகிறது. எமது முன்னோர்கள் ஒவ்வொருவரும் எம் வாழ்க்கைப் பயணத்திற்கு கற்றுத் தந்த பாடமே!

“தேரினை ஓட் டியதும் – குருஷேத்திரப்
போரினை முடித்ததும்
பரந்தாமன் – கிருஷ்ணன்
காரினை ஓட்டியதும் – ஆலடியில்
தேரினை ஓட்டியதும்
எம் மிரு குடும்பவாழ் வியல்
சீரினை ஓட்டியதும்
அம்மையா கிருஷ்ணபிள்ளை
அவனோ புராணத்தின் பார்த்தசாரதி
அம்மையாவோ எம்வாழ்வில்
நாம் கண்கூடாகப் பார்த்த !!! சாரதி”

(நினைவு மலரில் கவிஞர் விஷ்ணுப்பிரியா)

அல்வாய் கிருச்சியால் அண்ணமார் பிட்டு வைப்பும் வேள்வியும் இந்த வருடம் ஆலயத்தின் பிட்டு வைப்பு நிகழ்வு30.6.2021 புதன்கிழமையும், வேள்வி நிகழ்வு 04.08.2021 புதன் இரவு ஆரம்பித்து 05.08.2021 வியாழன் காலை நிறைவெய்தியது. இரண்டு நிகழ்வுகளும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

தகவல் - க.வரதவேல்





வருடா வருடம் மேற் கொள்ளப்பட்டு வருகின்ற அல்வாய் நொச்சியடி காளித் தெய்வ வருடாந்தப் பொங்கல் நிகழ்வானது 01.08.2021 காலை 10.00 மணிக்கு வழுந்து கட்டலுடன் ஆரம்பமாகி பி.ப.5.00 மணியளவில் பூசை நிகழ்வுடன் காளித் தெய்வத்தின் அருளால் இனிதே நிறைவெய்தியது.

தகவல்-க.பாக்கியநேசன்





மனித வாழ்வும் இறைபக்தியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருப்பது இன்றியமையாததாகும். ஆலயங்களில் வேள்வி முறைகள் பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை நடைபெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. கிராமிய தெய்வ வழிபாடுகளில் இம்முறையானது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகவுள்ளது. அந்த வகையில் ஆதிகால வேள்விமுறைகளை இன்றும் பேணிக்காத்து வரும் சில ஆலயங்களில் அல்வாய் கிருச்சியால் அண்ணமார் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயம் கிருச்சியால் குறிச்சியில் அமைந்திருப்பதனால் கிருச்சியால் அண்ணமார் ஆலயம் என்று அழைக்கப்படுகின்றது. இது நூறு வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்த ஆலயமாகும். ஆதி காலத்தில் பூவரசம் மரங்களும் ஒதியமரமும் இவ் ஆலயத்தின் விருட்சங்களாக இருந்தன. பின்பு ஒதியமரம் பட்டவுடன் இரண்டு பழமை வாய்ந்த பூவரசமரங்கள் அதன் விருட்சங்களாக இயற்கை அழகுடன் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றன. இந்த ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் பிட்டு வைப்பு நிகழ்வும், வேள்வியும் மிகவும் சிறப்பான

# அல்வாய் கிருச்சியால் அண்ணமார் ஆலயம்


■ கணபதிப்பிள்ளை வரதவேல் ■

முறையில் நடைபெற்று வருவது வழக்கமாகும். பிட்டு வைப்பு பூஜையானது வேள்விக்கான ஒரு முன்னேற்பாடான நிகழ்வாகும். இந்த நிகழ்வானது வேள்வி நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு வரும் புதன் கிழமை இரவு ஆலயத்தில் செய்யப்படுவதை ஒழுங்குமுறையாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள். பிட்டு வைப்புப் பூஜையின் போது எல்லா வகையான பிட்டுக்களுடன் சைவ, அசைவ உணவுகள் சமைத்து ஆலயத்தில் மடை பரப்பியவுடன் பூஜைகள் ஆரம்பமாகும். பூஜைகள் நடைபெற்றவுடன் சில நிமிடங்கள் ஆலய விருட்சங்களில் பல்லி சொல்லும் வரை காத்திருப்பார்கள். பல்லி சொல்லும் முறையானது ஆதிகாலம் தொடக்கம் இன்றுவரை பின்பற்றி வருகின்றமை அவர்களது தெய்வ நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. பல்லி சொல்லியவுடன் கழிப்பு செய்வதற்கான ஆயத்த நிகழ்வுகள் நடைபெறம். இம்முறையினை வேள்வி நடைபெறும் காலங்களிலும் பின்பற்றி வருகின்றமை வழக்கமாகும். இந்த வருடம் பிட்டு வைப்பு நிகழ்வானது 30.06.2021 நடைபெற்றது.

பிட்டு வைப்பு நிகழ்விலிருந்து ஒரு மாத காலத்தில் வேள்வி நடைபெறும். வேள்வி நடைபெறும்









தினத்திற்கு முதல் நாள் புதன் கிழமை இரவு மடை எடுத்தல் மற்றும் வழுந்து கட்டல் பூஜைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். ஆலயத்திற்கு உரித்துடையவர்களும் மற்றும் ஆலயத்தை சூழ வசிப்பவர்களும் தங் களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவேற்று வதன் பொருட்டு சகலவிதமான சைவ, அசைவ உணவு வகைகளை இரவு முழுவதும் பிரசாதத்துக்காக தயார்படுத்துவார்கள். மறுநாள் வியாழக்கிழமை காலையில் பெரியளவிலான மடை பரப்பி வேள்விக்கான பூஜைகள் யாவும் நடைபெற்று அடியவர் களுக்கு பிரசாதம் வழங்கலுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெறும்.

பூஜைக்காலத்தில் இவ் ஆலயத்திற் கான மண்டபப்படி பொருட்கள் யாவும் அமரர் இராசம்(இராசப்பா) அவர்களின் வீட்டிலிருந்தே ஆலயத்துக்கு எடுத்து வருவார்கள். பூஜைகள் நிறைவு பெற்றதும் திரும்பவும் சூலம் உட்பட ஆலயத்திற்கான பொருட்கள் யாவும் அவ்வீட்டிற்கு எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். தற்போது இராசப்பா வாழ்ந்த இடத்தில் சோதிடர் ம.சிவகுருநாதன் அவர்கள் ஆலயத் தின் மடைப்பண்டப் பொருட்களை வைத்து பேணிப்பாதுகாப்பதற்கான மண்டபம் ஒன் றினை அமைத்துள்ளார். இந்த ஆலயத்தில் விளக்கு வைத்து பூஜைகளை ஆரம்பத்தில் முறையே அமரர் மாணிக்கம்(கிருச்சியால்), அமரர் இராசம், அமரர் சு.சீவரத்தினம், சோதிடர் ம. சிவகுருநாதன் ஆகியோர் செய்து வந்ததோடு சிறிது காலம் திரு சீ.இரத்தி னேஸ்வரன், அமரர் ம. இராசரத்தினம்(M.R) ஆகியோர்கள் பூஜையினை செய்து வந்தார்கள். தற்போது திரு மயிலு நவநீதன் அவர்கள் சிறப்பான முறையில் பூஜை முறைகளைச் செய்து வருகின்றார்.

*1925 ம் ஆண்டுக்கு முற்பட்ட* காலத்தில் எமதூரைச் சேர்ந்தவர்கள் தொழில் நிமிர்த்தம் அரியாலையில் சென்று வாழ்ந்து வந்தார்கள். அங்கு தங்களுக்கு காவல் தெய்வம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்த அவர்கள் இவ் ஆலயத்திலிருந்து சூலம் ஒன்றினைக் கொண்டு சென்று அரியாலை மேற்கு வடலி வளவு என்னும் குறிச்சியில் வைத்து ஆதரித்து வந்தார்கள். அதனால் அதனையும் கிருச்சியால் அண்ணமார் ஆலயம் என்றே அழைக்கிறார்கள். இன்று இந்த ஆலயம் வளர்ச்சி பெற்று பத்துநாள் விழாக்கள் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் : சோதிடர் ம. சிவகுருநாதன்.

## அது ஒரு காலம் – 7

# தச்சனொல்லை பனையும் எங்களின் அசாத்தியத்துணிவும்

■ செல்லக்குட்டி கணேசன் ■

அல்வாய் மனோகரா தச்சனொல்லைக்குறிச்சியில் வாழ்ந்து வந்தவரான அமரர் கந்தர் மார்க்கண்டு வீட்டிற்கு தென் கிழக்கு மூலையாக ஒரு உயரமான பனை நின்றது. அப்பனையின் உயரத்தையும்(60 அடிக்கு மேலானது) வைரத்தையும் கணக்கிடும் போது அப்பனையானது எண்பது தொண்ணூறு வருடங்களுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என அனுமானிக்கக் கூடியதாகவிருந்தது.

அப்பனையில் நாளாந்தம் இரண்டு தடவைகள் ஒரு அன்பர் ஏறி "கள்" இறக்கி வருவார். அவருடன் உரையாடுகின்ற வாய்ப்பு எம் போன்ற இளைஞர் களுக்கு கிடைக்கும் போதெல்லாம் அவற்றை நாம் தவறவிடுவதில்லை. அவ்வாறு 1975 ஆம் ஆண்டு வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்தோற்சவத்திற்கு இளைஞர்களாகிய நாம் சென்று வந்தோம்.

அக்காலத்தில் வல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவமென்றால் வடமராட்சியில் உள்ள ஒவ்வொரு கிராமமும் களை கட்டியிருக்கும். கிட்டதட்ட எமதூரில் இருந்து வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடும் கடற்கரை பன்னிரண்டு மைல்(14கி.மீ) தூரம் இருக்கும். எல்லா இளைஞர்களும் நடந்தே செல்வோம். சில இளைஞர்கள் ஆலய வாசலுக்குச் சென்று வழிபட்டு கடற்கரைக்குச் செல்வார்கள். இன்னும் சில இளைஞர்கள் நேராக கடற்கரைக்குச் செல்வார்கள்.

தீர்த்தோற்சவத்திற்குச் சென்று வரும்போது கச்சான், கடலை, சோளம் என்று எல்லோரும் எங்களுக்கும் வீட்டிற்கும் வாங்கி வருவோம். (இன்றுள்ள எந்த விதமான நவீன உணவுப்பண்டங்களும் அன்று கிடையாது) பின்னர் தச்ச னொல்லை வெட்டையில் கூடுவோம். பௌர்ணமி நிலவில் ஆலய அனுபவங் களை பகிர்ந்து கொள்வோம். அவ்வாறு இருக்கும்போது அத்தொழிலாள அன்பர் எங்களுடன் இணைந்து கொண்டார். எங்களின் கதை நடுவே "நீங்கள் வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடும் காட்சியை இவ்வளவு தூரம் சென்று தானே பார்க்கிறீர்கள், நான் (அந்த உயரமான பனையைக் காட்டி) உந்தப் பனையில் இருந்துவருடந்தோறும் பார்க்கிறனான்" என்றார். நாங்கள் வியந்து போய் "என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டபோது அவர் அக்கடற்கரைக் காட்சியை வர்ணணை செய்த விதம் எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அன்றே, அடுத்த வருடம் நாங்கள் இப்பனையில் ஏறி அக்காட்சியைப் பார்ப்பதென முடிவு செய்தோம்.

1976 ஆம் ஆண்டு பிறந்தது. வல்லிபுர ஆழ்வார் கொடியும் ஏறியது. தீர்த்தோற்சவமும் வந்தது. பேசியதன் படி நாங்கள் ஆலயத்திற்கு செல்வதற் கான எந்த ஆயத்தமுமின்றி தச்சனொல்லை வெட்டையில் கூடினோம். அவ் "வெட்டை"யால் கோயிலுக்குச் சென்றவர்கள் கேள்வி மேல் கேள்வியை தொடுத்துச் சென்றார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு பதில் தான் இரவுக்கு போக இருக்கிறோம். நேரம் செல்லச் செல்ல ஆர்வம் மேலோங்குகிறது. பிற்பகல் 5.30 6.00 மணி முதலில் சண்முகம் ஜெயானந்தன் ஏறினான். அதன் பின்னர் சின்னத்தம்பி செல்வரத்தினம் ஏறினார். அவரும் இறங்கி வந்து அக்காட்சி அழகை விமர்சித்தார். ஆர்வம் மேலிட நான் ஏற முற்பட்ட போது என்னைத் தடுத்தார்கள். நான்(செ.க) அவற்றைப்பொருட்படுத்தவில்லை. எனக்கிருந்த துணிவும் நம்பிக்கையும் என்னை ஏற வைத்தது. வட்டு வரை ஏறினேன். (வட்டு மிதக்கத் தெரியாது அல்லது அதன் ரம்மியத்தை பல நிமிட நேரம் அதில் இருந்து பார்த்திருப்பேன்) இறங்கி வந்த நான் இறைவனுக்கு நன்றி சொன்னேன். இச்சம்பவத்தை எல்லோருக்கும் சொல்லி மகிழ்வுற்றோம். மெல்ல மெல்ல இச்செய்தி எனது தாயாரின் காதுக்கு எட்டியது. அம்மா தனது தலையில் அடித்து அடித்து தன்னை வருத்திக் கொண்டார். அதனைப் பார்த்து வருந்திய நான் அன்றிலிருந்து பனையில் கால் வைத்தது கிடையாது.



# அல்வாய்க்கிராமத்தில் பிறந்து அரியாலைக் கிராமத்திற்கு புகழ் சேர்ந்த மூதறிஞர் கவிஞர் க.வே.ஜயாத்துரை

■ கனகசபாபதி செந்தில்நேசன் (ஆசிரியர்)

அல்வாய்(மனோகரா) கிராமத்திற்கும், யாழ்ப்பாணம் அரியாலைக் கிராமத்திற்கும் உறவு வழியாகவும் தொழில் ரீதியாக வும் நீண்ட தொடர்பு காலம் காலமாக இருந்து வருவதை நாம் நன்கு அறிவோம். அந்த வகையில் அல்வாய் மயிலிட்டி வளவில் ஆண்கள் ஐவர், பெண்கள் ஐவர் கொண்ட பெரிய குடும்பத்திலிருந்து இரு பெண்கள் அரியாலைக் கிராமத்தில் திருமண பந்தத்தின் மூலம் இணைந்து கொண்டனர். இவ்விருவரில் பொன்னு என்னும் பெண் விசும்பர் என்று அழைக்கப்படும் வேலுப்பிள்ளை என்பவரை வாழ்க்கைத்துணைவராகக் கொண்டதன் மூலம் பாக்கியம், சொர்ணம்மா என்போரைப் பிள்ளைகளாகப் பெற்றார். மற்றவரான மாணிக்கம் அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலய ஸ்தாபகரான கதிர்காமு வேலுப் பிள்ளை என்பவரை மணம் செய்து கொண்டதன் மூலம் நான்கு பிள்ளைகளைப் பெற்றார். இவர்களில் மூத்தவரான நடராசாவும் இளையவரான ஜயாத்துரையும் இப்புவி வாழ மற்றைய இருவரும் சிறுவயதிலேயே இறந்து போனார்கள். மயிலிட்டி வளவில் தாம் பிறந்தோம் என்பதை தனது உள்ளக்கமலம் என்னும் நூலில் மூதறிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

"அல்வாயூர் மயிலிட்டி அக மாணிக்கம்
அரியாலையூர் வேலுப்பிள்ளை பெற்ற
நல்வாழ்வுப் பேறுகளில் ஈரவர் நாங்கள்
நாமகளாம் சரஸ்வதி நற்காப் புற்றோம்
சொல்வாக்கால் வாணியன்னைக் கடிமையாகித்
தூயதிரு வடிபணியும் தொண்டராகி
எல்லோரும் அவள் கருணை இன்பம் வேண்டி
இனிதுள்ளக் கமலமெனும் இசைநூல் தந்தோம்!"

இக்கவிதை வரிகளின் மூலம் கவிஞரின் தாய்மண்ணின் விருப்பினை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. அண்ணன் நடராசாவும் தம்பி ஜயாத்துரையும் வேறு வேறு இடங்களைச் சேர்ந்த பெண்களை திருமணம் செய்த போதும் ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள்.

எமது அல்வாய்க்கிராமத்திலிருந்து அக்காலப்பரப்பில் யாழ்பாணத்தில் உயர்கல்வி கற்பதற்காக வருகை தருவோருக்கு கவிஞரின் குடும்பம் புகலிடம் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்க தாகும். தந்தையார் வழியில் சிறுவயது முதல் சரஸ்வதி அம்பாள் மீது அளவிலாப்பக்தி கொண்டு வாழ்ந்து வந்த கவிஞர் ஜயாத்துரை தனது ஏழாவது வயதில் "காத்தவராயன்" கூத்தில் பாலகாத்தானாக நடித்ததன் மூலம் கலையுலகில் பிரவேசித்தார். 1935 ஆம்ஆண்டு ஸ்ரீகலைமகள் நாடகசபாவினை ஆரம்பித்து பல்வேறு இசை நாடகங்களில் கதாநாயகன் பாத்திரமேற்று தனது நடிப்பின் ஆற்றலை வெளிப்படுத்தி வந்தார்.

யாழ்ப்பாணம் தொல்பொருள் (நூதன சாலையில்) திணைக்களத்தில் கடமை புரிந்து வந்த இவர் அதிகம் படிக்காத போதும் யாப்பிலக்கணம் என்றால் என்னவெனக் கற்காத போதும் கல்வித் தெய்வமான சரஸ்வதி அம்பாள் மீது பற்றுதல் மிக்கவராக விளங்கியமையால் அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்று கவிதைகள் பலவற்றை யாத்து இலங்கையின் தேசிய, பிராந்திய பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தார். 1965 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கவிஞர் சொக்கன் தலைமையில் தனது கவியரங்கப் பிரவேசத்தை கவிஞரான க.வே.ஜயாத்துரை அவர்கள் ஆரம்பித்தார். கவிதையை வசன நடையில் வாசிக்காது இசையோடு பாடி பலரையும் பிரமிக்க வைத்தார். சொலை கவியரங்கமொன்றில் பிரபல கவிஞர் ஒருவர் "ஜயாத்துரைக்கு யாரோ எழுதிக் கொடுக்க கவிதைகளை வாசித்து வருகிறார்" என கவியரங்கம் இடம்பெறுவதற்கு முன்னர் இவரின் காதுக்கு எட்டும் வகையில் கூறியிருந்தார். இது கவிஞருக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. அக்கவிஞர் கவியரங்கில் தலைமையேற்று கவிதை பாட அழைத்த போது கவிஞர் ஜயாத்துரை கவிதை சொல்ல வரவில்லை, கவிதையை இசைக்க வந்துள்ளார் எனக் கூறியதும் கவிஞர் ஜயாத்துரை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதற்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டுமென்ற கவிஞர் அவர்கள் தலைவரான கவிஞர் தனது இருக்கையை விட்டு நகர்ந்து அரங்கிலிருந்த மற்றவர் களோடு அளவளாவுதைக் கண்ணுற்று அவருக்கு பதிலடி கொடுப்பதற்காக "அரியாசனம் விட்டு அயலாசனத்திலிருந்து மரியாதை செலுத்துகின்ற தலைவரே" என கவியிசைத்துப் பாடினார். அதனைச் செவியுற்ற தலைமைக் கவிஞர் ஓடி வந்து தலைமையாசனத்தில் அமர்ந்து கொண்டார். இவ்வாறு சமயோசிதமாக திடீரெனப் பாட்டிசைக்கும் வல்லமை பெற்றவராக விளங்கினார் கவிஞர் ஜயாத்துரை அவர்கள்.

அகில இலங்கை ரீதியாக 1969 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் நடாத்தப்பெற்ற கவிதைப் போட்டியில் பங்குபற்றி முதலாமிடத்தைப் பெற்ற கவிஞர், அதற்காக வழங்கப்பட்ட பரிசுத்தொகையை இந்தியாவின் முதற்பிரதமரான நேருவின் சகோதரியும் இந்தியக் காங்கிரசின் பெண் தலைமையாளராக விளங்கிய சரோஜினி நாயுடு அவர்களிடமிருந்து பெற்று பெருமை பெற்றார். தனக்கு வழங்கப்பட்ட பரிசுத் தொகையான பணத்தில் தங்கச் சங்கிலி செய்து தான் வணங்கும் சரஸ்வதி அம்பாளுக்கு அணிவித்து மகிழ்ந்தார். யாப்பு இலக்கணம் தெரியாது மரபுவழி யில் எதுகை. மோனை. இசைநயம் மிக்க கவிதைகளை வெண்பா, சீர்விருத்தங்களை இக்கவிஞர் எழுதி வந்தமையால் இவர் சார்ந்த இலக்கிய வட்டத்தினர் இவரை "வரகவி" என அழைக்கலாயினர். கவிஞர் ஜயாத்துரை அவர்கள் வாழ்ந்த காலத்தில் "வெள்ளைக் கமலம்", "வளர்தெங்கு", "சிறுவர்பாடல்கள்"? "உள்ளக்கமலம்" ஆகிய நூல்களை யாழ் இலக்கிய வட்ட வெளியீடாக வெளியிட்டிருந்தார். இக்கவிஞரின் ஆற்றல் இலக்கிய வெளிப்பாடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அகில இலங்கைக் கம்பன் கழகம் 1969 ஆம்ஆண்டு "மூதறிஞர்" என்ற கௌரவ பட்டத்தை வழங்கி கௌரவப்படுத்தியது. நீண்ட காலம் பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட மூதறிஞர், கவிஞர் க.வே. ஜயாத்துரை 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து தனது தாயின் ஊரான அல்வாய் மயிலிட்டி வளவில் காலமானார். மூதறிஞர் கவிஞர் ஜயாத்துரையைப் பெருமைப்படுத்தம் முகமாக யாழ். இலக்கிய வட்டம் வடக்கு அபிவிருத்தி புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரஅமைச்சின் ஊக்குவிப்பு நிதியில் கவிஞர் "ஜயாத்துரையின் கவிதைகள்" என்னும் நூலினை 2001 ஆம் ஆண்டு வெளியிட்டது.

# முள்ளாவத்தை கேவோலை(கேவத்தை) குறிச்சிகள் இணைந்த “வேல்ஸ்” எறிபந்தாட்ட மகளிர் அணி

■ நமசிவாயம் கிருஷ்ணானந்தன் ■

ஒரு கிராமமானது குறிச்சிகள் பலவற்றை கொண்டதாக அமைகின்றது. அதேபோல் தான் எமது மனோகராக்கிராமமானதும் பல குறிச்சிகளை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு குறிச்சியும் சில தனித்தன்மையான சிறப்புகளை உடையதாக இருக்கின்றது. “வேல்ஸ்” அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் குறிச்சிகளான முள்ளாவத்தை கேவோலை ஆகியவையும் சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. எமதூரின் முதல் ஆயுள்வேத வைத்தியரும், சமாதான நீதவானுமாகிய வைத்திய பூபதி அமரர் டாக்டர் சு.வேலும்மயிலும் பிறந்து வாழ்ந்த இடமான முள்ளாவத்தைக் குறிச்சியைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அவரைத் தொடர்ந்து இக்குறிச்சியில் பல வைத்தியர்களை உருவாக்கிய பெருமை அவரையே சாரும். அதேபோல் எமதூரின் முதல் விஷகடி வைத்தியரான அமரர் க.வேலுப்பிள்ளை பிறந்து வாழ்ந்த இடமும் கேவோலைக் குறிச்சியாகும். ஆன்மிகம், கல்வி, கலை, கலாசாரம் ஆகியவற்றுடன் விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை தன்னகத்தே கொண்டுள்ளது எமது மனோகராக் கிராமம். அந்த வகையில் பெண்களையும் விளையாட்டுத்துறையில் ஈடுபட வைப்பதன் நோக்கமாக எமதூர் குறிச்சிகளுக்கிடையில் குழுக்கள் அமைத்து ஒவ்வொரு குழுக்களுக்கும் தனித்தனியே பெயர்கள் வைத்து உருவாகியதே மகளிர் எறிபந்தாட்ட அணிகள். அதனால் உருவானதே முள்ளாவத்தை கேவோலை ஆகிய குறிச்சிகளை உள்ளடக்கிய குழுவான “வேல்ஸ்” அணியாகும். இவ்அணியானது விளையாட்டு வீராங்கனைகளின் வயதின் அடிப்படையில் A, B என இருபிரிவுகளாக வகுக்கப்பட்டன. இவ் அணியில் துரைமதி, இரத்தினேஸ்வரி, தயாவதி, ரமணி, கிருஷ்ணா, சிவகலா, ஜெயந்தி, வசந்தி, வதனி, குகமலர், வசந்தமதி, சிவச்செல்வி, ஜெயமதி, தெய்வரதி ஆகியோர் விளையாடியிருந்தார்கள். இவ் அணியின்




இடம் நிற்பவர் – செ.யோகராசா வலம் நிற்பவர் – தே.தேவகுமார்
இடமிருந்து வலம் – 1 – ச.துரைமதி. க. இரத்தினேஸ்வரி, சு. தயாவதி, இ.இரத்தினவேல். கு.ரமணி, பி.கிருஷ்ணா. சி.சிவகலா
இடமிரந்து வலம் – 2 – த.சந்திராதேவி, க.ஜெயந்தி, சி.வசந்தி, வ.வதனி, ப.குகமலர். பா.வசந்தமதி, ம.சிவச்செல்வி, கி.பவி
இடமிருந்து வலம் – 3 – இரா. இராசரத்தினம், வே.ஜெகதீஸ்வரன். ச.பிரபாகரன், ந.கிருஷ்ணானந்தம். வெ.கணேசவேல், ந.நவரட்ணராஜா, செ.பாரதாதேவி
இருப்பவர்க் இடம் – தி தெய்வரதி, வலம் ர.ஜெயமதி
படம் – டாக்டர் ச.வேலும்மயிலும் (இடம்), பொலிஸ் த.துரைராஜா(வலம்)

முகாமையாளராக திரு ந.கிருஷ்ணானந்தன் அவர்களும், பயிற்றுவிப்பாளராக திரு க.மகேந்திரராசா அவர்களும் ஆலோசகர்களாக திருமதி கி.பவி, திருமதி செ.பாரதா தேவி, திருமதி சி.சந்திரா, திருமதி இ.இராசரத்தினம் ஆகியோர்கள் இருந்தார்கள். *1984* ம் ஆண்டு பிள்ளை யார் வெட்டையில் நடைபெற்ற மகளிர்களுக்கான எறிபந்து சுற்றுப்போட்டியில் வேல்ஸ் அணியானது தம்மை எதிர்த்து விளையாடிய அணிகளை வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் மூன்றாம் பனையடி "தி ஏ றிம்" அணியினை எதிர்த்து வேல்ஸ் அணி விளை யாடி முதலாவது வெற்றியை பதிவு செய்தது. மற்றைய அணிகள் நடாத்திய போட்டிகளிலும் விளையாடி பரிசில்களை வென்றமை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

எமதூரில் மட்டுமல்லாமல் ஏனைய கிராமங் களான அல்வாய் பாரதிதாசன் சன சமூகநிலையம், கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையம், வதிரி மேற்கு பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம், வட அல்வை இளங்கோ சனசமூக நிலையம், நெல்லியடி என்.சி.சி. விளையாட்டுக்கழகம், யாக்கரை சனசமூக நிலையம் ஆகியவை நடாத்திய சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்றியதோடு, யாக்கரையில் நடைபெற்ற எறிபந்து சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் நெல்லியடி என்.சி.சி விளையாட்டுக்கழகத்துடன் விளையாடி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது. வேல்ஸ் அணியின் சி.வசந்தி, சி.சிவச்செல்வி, வே.வசந்தமதி, வே.வதனி, வே.ரமணி, சி.சிவகலா, சி.கிருஷ்ணா ஆகியோர்களின் நுட்பமான ஆட்டங்கள் பார்வையாளர்களால் விதந்து பாராட்டப்பட்டது. அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையம் நடாத்திய மகளிர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் இவ்அணியைச் சேர்ந்த சின்னத்துரை வசந்தி பங்கு பற்றி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை இவ் அணிக்கு பெருமை சேர்த்ததாகும்.

*16.05.1986* இல் அமரர்கள் டாக்டர் சு.வேலும் மயிலும் மற்றும் த.துரைராசா(பொலிஸ் உத்தி யோகத்தர்) ஞாபகார்த்தமாக கரப்பந்தாட்ட எறிபந் தாட்ட சுற்றுப்போட்டியினை கேவத்தை மைதானத்தில் எமதூர் குறிச்சிகளின் அணிகளுக்கிடையே திரு க.மகேந்திரராசா அவர்களின் தலைமையில் மின்னொளி யில் நடைபெற்றன. இந்நிகழ்வின் பிரம பார்வையாள ராக திரு க. கந்தசாமி ஆசிரியர் அவர்களும், திரைநீக்கம் செய்தவர் திரு த. இராசலிங்கம் பாராளுமன்ற உறுப் பினர் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக திரு ஆ.கதிரவேல்(அதிபர்), திரு தா.வீரசிங்கம்(அதிபர்), திரு இ.விஜயரட்ணம்(B.A. ஆசிரியர்) ஆகியோரும் பரிசில்களை வழங்கியவர் விஷகடி வைத்தியர் திரு க.வேலுப்பிள்ளை அவர்களும் கலந்து விழாவினைச் சிறப்பித்திருந்தார்கள். நன்றியுரையை திரு ந. கிருஷ்ணானந்தம் ஆற்றியிருந்தார். இப்போட்டியின் நடுவர்களாக திரு இ.இரத்தினராசா, திரு பொ.துரை ராசா, திரு சீ.கமலநாதன், திரு ஜோ.ச.சத்தியநாதன் ஆகியோர்களும், புள்ளியிடுபவர்களாக திரு ம. சிவகுரு


டாக்டர் சு. வேலும் மயிலும், பொலிஸ் த.துரைராஜா
ஞாபகார்த்தமாக மின்னொளியில் நடாத்தும்
கரப்பந்தாட்ட எறிபந்தாட்ட சுற்றுப்போட்டி
இடம்: கேவத்தை மைதானம்
காலம்: 16.5.1986. வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணி
தலைவர்: க.மகேந்திரராஜா
பிரதம பார்வையாளர்: திரு. க.கந்தசாமி ஆசிரியர்
திரைநீக்கம் செய்பவர்: திரு. த.இராஜலிங்கம் M.A. Dip.in.Ed ..
சிறப்புச் சொற்பொழிவு
திரு. ஆ.கதிரவேல் அதிபர் (அல்வாய் மனோகரா கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்)
திரு. தா.வீரசிங்கம் அதிபர்
திரு. இ.விஜயரட்ணம் B.A. (ஆசிரியர்)
பரிசில் வழங்குபவர்
திரு. க.வேலுப்பிள்ளை (விஷகடி வைத்தியர்)
வரவேற்பாளர்
திரு. ம.இராஜரட்ணம்
திரு. த.சின்னையா
திரு. ச.ஸ்ரீ தரன்
திரு. த.கிருஷ்ணா
புள்ளியிடுவோர்
திரு. ம.சிவகுருநாதன்
திரு. செ.ஜெயவீரசிங்கம்
திரு. செ.வீரராஜா
திரு. செ.யோகராஜா.
அறிவிப்பாளர்
திரு. ம.கணேசலிங்கம்
திரு. ந.செல்வரட்ணம்
நடுவர்கள்
திரு. இ.இரத்தினராஜா
திரு. பொ.துரைராஜா
திரு. சீ.கமலநாதன்
திரு. ஜோ.ச.சத்தியநாதன்
மைதான பொறுப்பாளர்கள்
திரு. மா.அழகானந்தன்
திரு. செ.செல்வராஜா
திரு. செ.செல்வலிங்கம்
திரு. வ.வேலாயுதம்.
திரு. செ.சிவபாக்கியன்
நன்றியுரை
திரு. ந.கிருஷ்ணானந்தம்
காட்சிப் போட்டி
கொற்றாவத்தை பூமகள் மாதர்சங்க அணி எதிர் வட அல்வை ஜொலி கேள்ஸ் அணி
மேலதிக குறிப்பு
இப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மனோகரா சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட இருக்கின் தங்களது பெயர்களை 16-5-86 வெள்ளிக்கிழமை — 4 மணிக்கு முன் பதிவுக்கட்டணம் 15/= ரூபா செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.
கரப்பந்தாட்டம் 6 பேரும் எறிபந்தாட்டம் 9 பேரும்
விழாச் சிறப்புக்காண அணி அணியென திரண்டு வருக....
13/05/1986 -: விழா அமைப்புக்குழுவினர் :-

நாதன், திரு செ.ஜெயவீரசிங்கம், திரு செ.வீரராசா, திரு செ.யோகராசா ஆகியோர்களும் அறிவிப்பாளர்களாக திரு ம.கணேசலிங்கம், திரு ந. செல்வரட்ணம்(அரி) ஆகியோர்களும் வரவேற்பாளர்களாக திரு ம.இராஜ ரட்ணம், திரு த. சின்னையா, திரு ச.ஶ்ரீதரன், திரு த.கிருஷ்ணா ஆகியோர்களும் மைதான பொறுப்பாளர் களாக திரு மா.அழகானந்தன், திரு செ.செல்வராசா, திரு.செ.யோகராசா, திரு செ.சிவபாக்கியன் ஆகியோர் கள் கடமையாற்றியிருந்தார்கள். இந்நிகழ்வின் காட்சிப் போட்டியாக கொற்றாவத்தை பூமகள் மாதர்சங்க அணி யினை எதிர்த்து வட அல்வை ஜொலி கேள்ஸ் அணியினர் விளையாடியிருந்தார்கள். இறுதிப்போட்டியில் வேல்ஸ் அணியினை எதிர்த்து மூன்றாம் பனையடி "தி ஏ றீம்" விளையாடி மூன்றாம் பனையடி தி ஏ றீம் வெற்றியை தன தாக்கிக் கொண்டது. வேல்ஸ் அணியின் ஆண்களுக்கான வொலி சொக்கர் அணியில் ச.பிரபாகரன், வே.ஜெகதீஸ் வரன், பெ.சிவானந்தன். தே. தேவகுமார் ஆகியோர்கள் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்அணிகளை அன்றைய பெரியவர்களாகிய கோ.சச்சிதானந்தம், செ.சிவபாக்கியம், ம.இராச ரத்தினம், ம.கணேசலிங்கம், மா. அழகானந்தன், வ.வேலாயுதம், மு.நவரத்தினம், மு.குலரத்தினம், த.சின்னையா, ம.சிவகுருநாதன், மா.சின்னத்துரை, செ.தேவராசா, செ.வீரராசா, செ.ஜெயவீரசிங்கம் ஆகியோர்களுடன் வாலிபர்களாகிய சி.ஜீவகன், வே.கணேசவேல், ந.நவரத்தினராசா, செ.யோகராசா, செ.யுவராசா, இ.இரத்தினவேல் ஆகியோர்களும் சேர்ந்து இவ் இரண்டு அணிகளையும் ஊக்கப்படுத்தியமை என்றும் எம் நினைவில் நிற்கின்றன.

# வடமராட்சிக் கல்விப் பரம்பரியத்தில் அல்வாய் "மனோகரா"வின் மூலவேர் : அல்வாய் க. வேலுச்சோதிடர்

கலாநிதி த. கலாமணி

கல்வி வரலாற்றில் உயர் குடிப்பிறந்த சமூகத்தினரின் கல்விப்பாரம்பரியமே காலத்துக்குக் காலம் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால், ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் கல்விப் பாரம் பரியம் பற்றிய தகவல்கள் எவையும் அறியப்பட முடியாத அளவுக்கு மறைக்கப்பட்டோ திரிபுபடுத்தப் பட்டோ வந்திருக்க வேண்டும். இச்சமூகத்தினரின் கல்வி குறித்து அக்கறை கொள்ளப் படாமையே இதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

இற்றைக்கு ஏறத்தாழ 200 ஆண்டுகளின் முன் அல்வாய்க்கிராமத்தில் கதிரன் என்பவர் தோன்றிப் பரப்பிய கிளைகளுள் அவரது புத்திரர்களான காத்தார், வேலு ஆகிய இருவரும் முக்கியமானவர்களாக இன்றும் அறியப்படுபவர்கள். வேலு அவர்கள் சோதிடம் கற்று ஆசிரிய சேவையும் செய்து வந்தவர். காத்தார் அவர்கள் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராகத் திகழ்ந்தவர். ஒடுக்கப்பட்ட மக்களிடையே அறிவைப் பரப்புவதில் சோதிடமும் கூத்துக் கலையும் முக்கிய பங்காற்றியுள்ளன என இன்று அறியப்படு கின்றது.

வேலு அவர்கள் சோதிடத்தில் வல்லவராக இருந்து வந்தமையால் வேலுச்சோதிடர் என்றே அறியப்பட்டு வந்தார். பல்வேறிடங்களிலும் இவரின் சோதிடத்திறமை குறித்த தகவல்கள் அந்நாளில் பரவத் தொடங்கியிருந்தன. வேலுச் சோதிடர் சைவாசாரசீலராக விளங்கி தமது சமூகத்தவர்க்கு சைவ சமயத்தின் மேன்மையை பிரசங்கங்கள் மூலம் எடுத்தியம்பி வந்தார். சைவப்பிள்ளைகளை திண்ணைப் பள்ளியொன்றில் வைத்து தமிழ், சைவசமயம் கற்பித்து வந்தார். சூரன் அவர்கள் கல்வியை நிறுவனமயப்படுத்தி "தேவரையாளி சைவ வித்தியா சாலையாக" ஆரம்பிப்பதற்கு முன்னரே வேலுச்சோதிடரின் ஆசிரியப்பணி ஆரம்பித்து விட்டது. இவர் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் வைத்து ஓலையில் தேவாரங்களை எழுதி, சைவப்பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தமையை பாடசாலை நிருவாகத்தினர் தடுக்க முனைந்த போதே அங்கிருந்து வெளியேறி திண்ணைப்பள்ளியை ஆரம்பித்தார்.

தேவரையாளி சைவ வித்தியாசாலையை நிலையான கட்டடத்தில் சூரன் 1917இல் ஆரம்பித்தபோது, அப்பாடசாலையின் பூர்வாங்க வேலைத்திட்டங்களிலும் செயற்பாடுகளிலும் வேலுச் சோதிடரை சூரன் அவர்கள் இணைத்துக் கொண்டார். அங்கு கல்வி கற்பதற்கென தமது திண்ணைப்பள்ளி மாணவர்களை அனுப்பி வைத்ததோடு, நிதி சேகரிப்பிலும் உதவி புரிந்து, அப்பாடசாலையில் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுள் ஒருவராக தனது மகனான தம்பையா அவர்களை வேலுச்சோதிடர் வழங்கி யிருந்தார். வேலுச்சோதிடர் அவர்களின் சிந்தனை வழியே அல்வாயில் "விக்னேஸ்வரா வாசிகசாலை" நிறுவப்பட்ட போது அவ்வாசிகசாலையில் நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்களை நடத்து வதில் வேலுச்சோதிடர் முன்நின்றார். விக்னேஸ்வரா வாசிக சாலையில் காலா காலமாக நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்கள் குறித்து 1930 களில் வெளிவந்த பத்திரிகையான ஈழகேசரியில் செய்திக் குறிப்புகள் உண்டு.

வேலுச்சோதிடர் சாதகக் கணிப்பில் சிறந்து விளங்கி யவர்; கால வரையறைகளோடு சாதகப்பலன்களைச் சொல்வதில் ஆற்றல்மிக்கவர். ஒரு சமயம் வேலுச்சோதிடரின் பெறா மகனாகிய சபாபதி அவர்கள் (இவர் காத்தாரின் மகன்) கடுமை யான சுகயீனமுற்று உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த வேளை சபாபதி அவர்களின் மனைவி நிறைமாதக் கர்ப்பிணி யாக இருந்தார். "பிறக்கப்போகும் பிள்ளை ஆணாக இருந்தால் சபாபதி ஒரிரு தினங்களுள் உயிர்பிழைத்து வருவான்" என வேலுச்சோதிடர் அவர்கள் சாதகப் பலனின் பிரகாரம் எதிர்வு கூறியிருந்தார். அப்பிள்ளை(இவரே என் தந்தையார் தம்பிஐயா) ஆண்பிள்ளையாகப் பிறந்தமையால் சபாபதி அவர்கள் உயிர் பிழைத்து உடல் நலமும் பெற்றார். இவர் நூறு வருடங்களுக்கும் மேலாக உயிர் வாழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேலுச் சோதிடர் அவர்களின் வழியில் அவரின் மகனான தம்பையா அவர்களும் சோதிடராக விளங்கினார். அவரின் பெறாமகன் வழிப்பேரனான எனது தந்தையார் ச. தம்பிஐயா அவர்களும் சோதிடராக விளங்கியவரே. வேலுச்சோதிடரின் பேரனான வே.த.தணிகாசலம் (தம்பையா அவர்களின் மகன்) அவர்களும் தாய் வழிவந்த கவிஞர் மு. செல்லையா அவர்களும் சோதிடம் அறிந்தவர்களாக விளங்கினார்கள். வேலுச்சோதிடரின் பெறாமகனான கதிர்காமு(காத்தாரின் மகன்) பாடல்களை இயற்றி வந்தவர். எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையாரின் ஆரம்ப கால ஊஞ்சற்பாட்டை கதிர்காமு அவர்களே எழுதியிருந்தார். இவர் கைநாடி பார்ப்பதிலும் வல்லவராக விளங்கினார். வேலுச் சோதிடர் அவர்களின் பெறாமகனான சுந்தரம்(காத்தாரின் மகன்) அவர் களின் மகனான வேலும்மயிலும் அவர்களே எமது கிராமத்தில் தராதரப் பத்திரம் பெற்ற முதலாவது வைத்தியர் ஆவார். வேலும் மயிலும் அவர்களின் மகன் கணேசவேல் அவர்களும் தராதரப் பத்திரம் பெற்ற வைத்தியரே.

வேலுச்சோதிடர் அவர்கள் அல்வாய் தெற்கின் குருத்து வப் பரம்பரையின் மூலவராக விளங்கியவர். குருத்துவப் பணியில் சிறந்து விளங்கிய அதிபர் வே.த.தணிகாசலம்(தம்பையாவின் மகன்), சைவம் ச. சிவகுரு ஆசிரியர்(சபாபதியின் மகன்) ஆகியோரும் வேலுச்சோதிடர் வழி வந்தவர்களே. ஆசிரியராகி விரிவுரையாளராகி, கலாநிதிப் பட்டமும் பெற்ற வகையில் வேலுச் சோதிடர் அவர்களின் குருத்துவப் பரம்பரைத் தொடர்ச்சியாகவே என்னையும் நான் கருதுகிறேன்.

இற்றைக்கு, ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் அல்வாயில் காத்தவராயர் கோயிலை நிறுவி சைவ வழிபாட்டைத் தொடக்கி வைத்த பெருமை காத்தார், வேலச்சோதிடர் ஆகியோரின் தந்தையான கதிரன் அவர்களையே சாரும். எனினும் தீர்க்க தரிசனத்தால் அவரின் பிள்ளைகளான காத்தார், வேலுச்சோதிடர் ஆகியோர் அல்வாயில் கல்விப் பாரம்பரியத்தையும் கலைப்பாரம் பரியத்தையும் முன்னெடுத்துச் சென்றவர்கள் ஆவர்.

இவ்வழியே கல்வி, சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளில் கதிரனின் சந்ததியினர் சிறந்து விளங்கி வரு கின்றனர்.

அல்வாய் தெற்குப் பிரதேசத்தில் முதலாவது ஆசானாக விளங்கியவர் என்ற வகையிலும் சைவ வழி பாட்டின் தந்தையாக விளங்கியவர் என்ற வகையிலும் மத மாற்றத்திற்கு இடம் கொடாமல் தமது பிரதேசத்தில் சைவ மரபைப் பேணிக் காத்தவர் என்ற வகையிலும் அல்வாய் வேலுச்சோதிடர் அவர்களுக்கு அல்வாயின் கல்வி வரலாற்றில் தனியிடம் உண்டு. இன்று எமது அல்வாய்ப்பிரதேசத்தில் கல்வியிற் சிறந்தவர்கள் உருவாகி வருவதற்கான மூலவேர் வேலுச்சோதிடரே என்று கூறின், அது மிகைப்பட்ட கூற்று அன்று.



# கலைத்துவம் - கவித்துவம் -கல்வித்துவம் கொண்ட ஓர் ஆளுமைப் பிரவாகமே அமரர் பவானி பிரபானந்தன்

■ வெல்லக்குட்டி கணேசன் ■

இமையாணனைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் அல்வாயூரை புகுந்த இடமாகவும் கொண்ட அமரர் பவானி பிரபானந்தன் மூவிடத்து முதுசமாவார். எப்பொழுதுமே இவர் பிறந்த இடத்து உறவுகளையும் புகுந்த இடத்து உறவுகளையும் மேன்மைப்படுத்திப் பார்ப்பதில் அக்கறை கொண்டார், அதில் வெற்றியும் கண்டார். ஆரம்பிக்கப்பட்ட அனைத்துக்குமே ஒரு முடிவு நிச்சயிக்கப்படுகிறது. இது உலக நியதி. மாற்றி அமைக்கவோ மறுதலிக்கவோ முடியாத சர்வ நிச்சயமான ஒன்று. இது உயிரினங்களுக்குப் பொருத்தமானது. “தோன்றுபவை எல்லாம் தங்கி விட்டால் தாங்காது இவ்வுலகு” என்ற சித்தர் வாக்கிற்கிணங்க 34 வருடங்கள் இவ்வுலகில் பிறந்து போராடி வளர்ந்து இறையடி சென்றிட்ட அமரர் பவானி பிரபானந்தன் பற்றியும், அவர் தம் கணவர் பற்றியும், பிள்ளைச் செல்வங்கள் பற்றியும் நான் நன்கறிவேன். 29.10.2002 இல் இல்லற பந்தத்தில் அடி எடுத்த திரு திருமதி பிரபானந்தன் ஆகியோர் இல்லற வாழ்வின் பேறாக பிரபானுஜன், பிரதிக்ஷா ஆகிய இரு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று அகமகிழ்ந்திருந்தனர். அமரர் பவானி பிரபானந்தன 6 வருட காலங்களே இல்லற பந்தத்தில் இணைந்திருந்தார். கொடிய நோய் ஒன்றினால் கணவனையும் பிள்ளைகளையும் பிரிந்து இறையுலகெய்தினார். இந்த அமரர் பவானி பிரபானந்தன் யார்? இவரது சால்பு என்ன? இவை பற்றிய ஒரு சுருக்கக் கண்ணோட்டமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைத்துவம் - கவித்துவம் - கல்வித்துவம் கொண்ட ஒரு ஆசிரிய மணியே அமரர் பவானி. இவர் ஒரு கவிஞர். கலை ஈடுபாடு கொண்டவர். சிறுவர்களுக்கு உகந்த இசை நாடகங்களைத் தயாரித்து மெட்டமைத்து மழலைகளிற்கு வினயத்துடன் பயிற்றுவிப்பார். கலைகளில் மிகுந்த இடுபாடு கொண்டவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய போது தன்னுடைய வகுப்பு மாணவர்களுக்கும் சமாந்தர வகுப்பு மாணவர்களுக்கும் சிறுவர் இசை நாடகங்களைப் பயிற்றுவித்து தேசிய ரீதியான போட்டிகளில் பங்கெடுக்கச் செய்ததோடு பல பாராட்டுப் பத்திரங்களையும் பெற்ற இவர் தானும் சிறந்த நடிகராகப் பல நாடகங்களில் தன்னை அடையாளப் படுத்தியவர். சுருக்கமாகச் சொன்னால் கலை மீது இவரிற்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது எனில் அது மிகையாகாது.

மேலும் அமரர் பவானி பிரபானந்தன் கவித்துவம் உடையவராகவும் இனம் காணப்பட்டார். மழலைகளுக்கு உகந்த சில கவிதைகளை இயற்றியதோடு நின்று விடாது மழலைகளிற்குக் கவிதை நூல் ஆக்கிக் கொடுக்கும் ஒரு கனவையும் தனது மனக்கண்முன் கொண்டிருந்தார் என பிரபானந்தன் ஆசிரியர் கூறக் கேட்டதுண்டு. இதன்பேறாக அமரரின் இறப்பிற்குப் பின்னர் இவரது நினைவாக இந்தியக் கவிஞர் கலாநிதி நா.முத்துக்குமாரு அவர்களின் ஆசியுரையுடன் மழலைச் சிறகுகள் என்ற கவிதை நூல் தொகுப்பை பிரபானந்தன் வெளியீடு செய்து இலவசமாக வழங்கியிருந்தமை தனது பாரியாரின் சிறப்பான எண்ணப் பாங்குகளுக்கு இட்ட தூபமெனவே எண்ணத் தோன்றுகிறது. இம்மழலைச் சிறகுகள் என்ற கவிதை நூல் தொகுப்பு நூலாக அமைவதுடன் அமரரின் கவித்துளிகளும் அங்கு பின்னட்டைப் பக்கத்தை அலங்கரித்து நிற்பதைப் பார்க்க முடிகிறது.

அமரர் பவானி பிரபானந்தன் சிறுவயதினராக இருந்த போதும் இல்லற பந்தத்தின் பின்னர் தான் எதிர் காலத்தில் இலவசமாக ஒரு முன்பள்ளி ஒன்றை உருவாக்கி நடாத்த வேண்டும் என அடிக்கடி தன்னிடம் கேட்டுக் கொள்வார் என தம்பி பிரபானந்தன் கூறக் கேட்டிருக்கின்றேன். அவருடைய அவாவிற்கு ஏற்றாற் போல் தொண்டைமானாறில் தன் கணவருடன் இணைந்து முன்பள்ளி ஒன்றை உருவாக்கி தமது சொந்தப் பணத்தில் முன்பள்ளி ஆசிரியைக்கான வேதனத்தையும் வழங்கி கல்விப்புலம் சார்ந்த பணிதனை பவானி முன்னெடுத்திருந்தார். இதுவே இவரது கல்வித்துவத்திற்கும் சான்று பகருகின்றது. இன்று இவர் அமரரான போதிலும் கூட இன்றும் குறித்த முன்பள்ளியை சிறந்த முறையில் அவரது தயார் முகாமைத்துவப்படுத்தி வருவது பவானியின் நினைவுகள் பற்றிய நிலைப்பிற்கு அச்சாணியாகும் என்பதை மறக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது.

தோற்றம் பெற்றதில் இருந்து எல்லைக் கோட்டினை முட்டும் வரை ஏற்றுக் கொண்டு நடித்த பாத்திரங்கள் எண்ணிலடங்கா. ஒவ்வொன்றிற்கும் ஏற்றவாறு மிகக் கச்சிதமாக நடித்து தனது எல்லைக் கோட்டை அடைவதே வாழ்வியல் நெறிமுறையாகக் கொள்ளப்படுகிறது. இந்த எல்லைக் கோடே அவனது வாழ்க்கைப் பாதையில் சீர்மைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் ஓர் உரைகல்லாகும். இந்த வகையில் தனது இறுதிக்கட்ட வாழ்வியலில் தான் ஒரு பட்டதாரியாக வர வேண்டும் என்ற வேணவாவினால் கல்விமானிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு தனது இறுதி வருடப் பரீட்சையினை செம்மையுற எழுதி பெறுபேறு வருவதற்கு முன்னர் இவர் அமரத்துவம் அடைந்தார். சிங்களம், ஆங்கிலம், பொருளியல் போன்ற பாடங்களில் அதிவிசேட சித்தியுடன் அமரர் சிறப்புச் சித்தி பெற்ற போது பவானி உயிருடன் இல்லை என்பது ஒரு துரதிஷ்டவசமான சூழ்நிலையே எனலாம். எது எவ்வாறாக இருந்தாலும் அமரர் பவானி அவர்கள் ஒரு கவிஞராக கவியாற்றல் மிக்கவராக. கல்விமானாக, கல்வி நன்கொடையாளராக, பல்பரிமாணம் கொண்ட ஆளுமை உடையவராக என்றும் எம் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

## அஞ்சலி
## அமரர் சி.மதியழகன்(மதி)
## (25.01.1963 - 07.08.2021)



எல்லோராலும் மதி என்று அழைக்கப்பட்டு வந்த மதியழகனின் திடீர் மறைவானது அவருக்கு உரித்தான மூன்று கிராமங்களையும் அவரது நட்பு வட்டங்களை யும் அதிர்ச்சியில் உறைய வைத்த ஒரு நிகழ்வாகும்.

இவர் அல்வாய் மனோகரா தனத்தியவத்தை குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் காசிநாதர் பறுபதம் தம்பதிகளின் ஏக புதல்வி இராஜேஸ்வரி(மாம்பழம்) அவரது கணவர் அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த அமரர்கள் மாணிக்கம் செல்லம்மா தம்பதிகளின் ஏகபுதல்வன் சிவஞானசுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் ஆவார். இவரது சகோதரி மதிவதனி தற்போது குடும்பத்தினருடன் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்.

25.01.1963 இல் பிறந்த மதியழகன் தனது ஆரம்பக்கல்வியை அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியா சாலையிலும் இடைநிலைக்கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் பயின்றார். கல்வி கற்கும் காலத்திலே கல்வியோடு மெய்வல்லுனர் போட்டி, உதைபந்தாட்டம் ஆகியவற்றிலும் தனது திறமையை வெளிக்காட்டினார். இதனால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நல்ல மதிப்பைப் பெற்ற மாணவனாக விளங்கினார். இவர் விளையாட்டுத்துறை யில் காட்டிய ஆர்வம் இவர் சார்ந்த விளையாட்டு கழகங்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம்

தாய்வழிக் கிராமமான தனத்தியவத்தைக் குறிச்சியிலும் பின்னர் தந்தை வழிக் கிராமமான வீரபத்திரர் கோயிலடியிலும் வாழ்ந்து வந்தவரான இவர் தந்தை வழிக்கிராமமான நக்கீரன் சனசமூக நிலைய உறுப்பினராகவிருந்து அந்நிலைய செயற்பாடுகளில் தனது சகலவிதமான பங்களிப்புகளையும் வழங்கி வந்தார். அவை மட்டுமல்லாமல் அக்கழகத்தினுடைய நல்லதொரு உதைபந்தாட்ட வீரனாகவும் மிளிர்ந்தார். வருடந்தோறும் அக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற தீபாவளி மெய்வல்லுனர் போட்டியில் இவரது பங்கும் பணியும் காத்திரமானவை ஆகும்.

பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலையில் தொழில் துறையில் தனது கவனத்தைச் செலுத்தியவர். 1982 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 20 ஆம் திகதி அல்வாய் வடமத்தி குமுதெணியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் சிவசுப்ரமணியம் தயாநிதி தம்பதிகளின் இரண்டாவது புதல்வி சியானியை காதல் திருமணம் செய்து கொண்டார். இவரே இக்குடும்பத் தின் முதல் மருமகனுமாவார்.

இவர் இக்கிராமத்தில் திருமணம் செய்து கொண்டதன் பயனாக குமுதெணிப்பிள்ளையாரின் பக்தரானார். இதன்பேறாக அவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்ற ஆவணி சதுர்த்திப்பூசையும் பெருங் கதை 18 ம் திருவிழா உபயமும் கிடைக்கப் பெற்றார். இவற்றோடு நக்கீரன் குச்சம் ஞானவைரவர் ஆலய 5 ஆம் திருவிழா உபயகாரராகவும், அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய 7 ம் திருவிழா உபயகாரராக வும் தன்னை இணைத்துக் கொண்டு அவற்றிற்கான பங்களிப்புகளையும் வழங்கி வந்தார்.

இவற்றுடன் மனைவி வழிக்கு உரித்தான குமுதெணி "விக்கிரமன்ஸ்" விளையாட்டுக் கழகத்தில் அங்கத்தவராக இணைந்து செயற்பட்டு வந்ததோடு, அக்கழகத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் தைப்பொங்கல் மெய்வல்லுநர் போட்டியில் கலந்து சிறப்பிக்கும் ஒருவராகவும் இருந்து வந்துள்ளார்.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட இவருக்கு டோஜிதன் என்ற ஒரு ஆண்மகன் உள்ளார். ஹாட்லி கல்லூரி மாணவனான டோஜிதன் உயர் தேசிய டிப்ளோமா மென் பொறியியல் கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட போராட்ட சூழ்நிலையால் தொழில் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அச்சமும் எல்லோரையும் போலவே இவரையும் கௌவ்விக் கொள்ள சவூதி அரேபியாவுக்கு பயணமானார்.

சிறந்த கனரக சாரதியாக தனது தொழிலை ஆரம்பித்தவர் ஒன்பது வருடங்களாக அங்கேயே தொழில் புரிந்த பின்னர் ஊருக்குத் திரும்பினார். ஊர் நிலவரம் சரிவராததால் வன்னி சென்று புதுக்குடி யிருப்பில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தார்.

அங்கு வாழும் காலத்தில் சர்வதேச செஞ்சிலுவை(I.C.R.C) சங்க வாகன சாரதியாகவிருந்து நெருக்கடியான காலத்திலும் மக்களுக்குத் தேவையான சேவைகளை துணிச்சலுடன் ஆற்றி வந்தார்.

2009 வரை தொடர்ச்சியாக வன்னியில் வாழ்ந்து வந்தவரான மதியழகன் அங்கு ஏற்பட்ட பெரும் போரில் அகப்பட்டு, அதிலிருந்து மீண்டு புனர்வாழ்வு பெற்று 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி ஊருக்கு குடும்பத்தினருடன் வந்து சேர்ந்தார். அன்று தொடக்கம் மரணம் வரை தனக்கு உரித்தான மூன்று கிராமங்களையும் நேசித்து வாழ்ந்து வந்தார்.

தொழில்துறையை விருத்தி செய்யவென "ஆட்டோ" வாகனமொன்றை கொள்வனவு செய்ததோடு, பருத்தித்துறை சிற்றூர்தி(மினிபஸ்) சங்கத்தில் தன்னை ஒரு அங்கத்தவராக இணைத்துக் கொண்டு சிற்றூர்தி சாரதியாகவும் தொழில் புரிந்தார்.

அவ்வாறு 07.08.2021 சிற்றூர்திச் சாரதியாக யாழ்ப்பாணம் சென்று வந்தவர் மீண்டும் செல்வதற்கு முன்னர் மதிய உணவை உண்ணும் போது மாரடைப்பால் காலமானார்.

இவர் முருக பக்தரான திரு முருக கிருபானந்த வாரியாரின்(இந்தியா) சிஷ்யராவிருந்து அவரிடமே சமய தீட்சை பெற்று வந்தவரான காசிநாதர் (காசிச் சுவாமிகள்) அவர்களுடைய பேரன் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு "நாங்கள்" எமது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- செல்லக்குட்டி கணேசன்**

## அஞ்சலி

**அமரர் செல்வரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா**

**(24.04.1944 - 25.08.2021)**



எம்மவர்களால் ராசாக்கா என்று அன்பாக அழைத்து வரப்பட்ட செல்வரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் இழப்பானது உற்றார் உறவினர்களுக்கு பெரும் சோகமே. மெழுகுதிரியானது உருகி உருகி இருக்குமிடத்திற்கு ஒளி கொடுப்பதைப்போல ராசாக்கா தனது குடும்பங்கள் உயர்வு பெற தன்னை அர்ப் பணித்து வாழ்ந்தவர் ஆவார். அன்பான வார்த்தைகளால் முகம் மலர வருவோரை மதித்து வரவேற்கும் பண்பும் உபசரிக்கும் முறைமையும் வழியனுப்பி வைக்கும் மனிதாபிமானச் செயற்பாடும் கொண்ட இவர் *25.08.2021* இல் இயற்கை மரணமெய்தினார்.

இவர் அல்வாய் மனோகரா கிளானைக் குறிச்சியைச் சேர்ந்தவரான ஐயாக்குட்டி ஆழ்வாத்தை தம்பதிகளின் புதல்வர் சுப்ரமணியம் அவர் மனைவி அல்வாய் வடக்கு வயல் குறிச்சியைச் சேர்ந்த வைரவிப்பிள்ளை மகள் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி ஆவார். சு.சின்னத்துரை (வன்னிய சிங்கம்), திருமதி இராசரத்தினம் விஜயநாதன், திருமதி தங்கமாமயில் கனகரத்தினம் ஆகியோர் இவரின் உடன் பிறப்புகளாவர்.

*24.04.1944* ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றார். அக்கால சூழமைவுக்கு ஏற்ப பாடசாலைக் கல்வியை தொடராது நிறுத்திக் கொண்ட இவர் பெற்றோரின் குடும்ப பொருளாதார விருத்திக்காக தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

திருமண காலம் பொருந்திவர அல்வாய் மனோகரா இயவராந்தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான குழந்தை செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் ஸ்ரீஸ்கந்தராசாவை பெற்றோர் மணம் முடித்து வைத்தனர். *1961* ஆம் ஆண்டு திருமண வாழ்வில் இணைந்து கொண்ட இவர்கள் பத்து வருடங்களின் பின்னரே பெற்றோராகும் பேறினைப் பெற்றனர். அவர்தான் சிவசங்கர். இவருக்கு கல்வியை யும் அதனூடாக அரசதொழிலையும் (ஸ்ரீலங்கா போக்குவரத்து சபை நடத்துனர் - பருத்தித்துறை) பெற்றுக் கொடுத்து மகிழ்ச்சி கண்ட பெற்றோர் அல்வாய் கிளானைக் குறிச்சியைச் சேர்ந்தவரான செல்வலிங்கம் தர்மவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி சரசாவை மணம் முடித்து மகிழ்வு கொண்டனர். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக அபிஷனா, அபிராம் ஆகிய இரண்டு பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்வுற்றனர்.


கணவரின் இழப்பின் பின்னர் மனச் சோர்வடைந்திருந்த ராசாக்கா மகன், மருமகள், பேரப் பிள்ளைகளின் ஆதரவோடு வாழ்ந்து வந்தார். எமது சமூக நிறுவனங்கள் அனைத்திற்கும் தமது பங்களிப்பை ஆற்றி வந்த ஸ்ரீஸ்கந்தராசா செல்வரத்தினம் குடும்பத் தினர் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய *4* ம் திருவிழா உபயகாரருள் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை “நாங்கள்”வேண்டிக் கொள்கிறோம்.

- செல்லக்குட்டி கணேசன்

## அஞ்சலி

**அமரர் மயிலு இராசரத்தினம்(MR)**

**(27.10.1938 - 23.08.2021)**



எமது கிராமத்தின் பழம்பெரும் நாடகக் கலைஞன் மயிலு இராசரத்தினம்(ஆசு) அவர்கள் *23.08.2021* இரவு *10.45* மணியளவில் இயற்கை எய்தினார். அல்வாய் கிராமத்தின் கேவோலைக் குறிச்சியில் வாழ்ந்தவர்களான மயிலு பாக்கியம் தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்த இவருக்கு கணேசலிங்கம் அருந்ததி யம்மா பாக்கியமலர் ஆகியோர் உடன் பிறந்தவர்கள் ஆவர். பத்து வயதில் பாடசாலை நாடகங்களில் நடிக்கத் தொடங்கியவர் நகைச்சுவை நடிப்பில் சிறந்து விளங்கினார்.

ஆரம்பத்தில் பெண் பாத்திரங்களில் தோன்றினாலும் பின்னாளில் பல்வேறு பாத்திரங்களில் நடித்துப் புகழ் பெற்றார். குறிப்பாக காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் சின்னான் டாப்பர் மாமா சாம்பன் பாத்திரங்களில் பாடி நடித்து தனித்துவமான நடிகனாக மிளிர்ந்தார். இலங்கையின் வடமாகாணத்தின் பல ஊர்களிலும் மேடையேறியவர் இலங்கைத் தொலைக்காட்சியில் (ரூபவாகினி) ஒளிபரப்பான செ.விவேகானந்தனின் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் நடித்ததன் மூலம் நாடறிந்த நடிகனானார்.

இயல்பாகவே நகைச்சுவை உணர்வுடன் கூடிய இவரது வெள்ளாந்தித்தனமான பேச்சு அவர் இருக்கும் இடத்தினைக் கலகலப்பாக்கும். பருவ வயதை அடைந்ததும் சின்னப்பாதிக் குறிச்சியைச் சேர்ந்த இராசன் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகள் இராசரத்தினத்தை திருமணம் செய்து இரத்தினவேல் இராதை ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்று எளிமையான வாழ்க்கை வாழ்ந்த இவர் ஒரு ஓய்வுநிலை மின்சாரசபை ஊழியராவார். இன்று *80* வயது கடந்த நிலையில் இயற்கை அவரைத் தன் பக்கம் அழைத்துக் கொண்டதில் உடலளவில் மறைந்து போனாலும் காலத்தை வென்ற ஒரு கலைஞனாக எம்மவரிடையே என்றும் நிலைத்திருப்பார்.

- கனகசபாபதி செல்வநேசன்

**மேலதிக தகவல்**

“அல்வாய் மனோகராவின் வியத்தகு விளையாட்டு வீரன் அமரர் நடேசு இராசரத்தினம்(N.R)” கட்டுரையில் இராசரத்தினம் அவர்கள் கெங்காதேவியை திருமணம் செய்து நான்கு பெண் பிள்ளைகளை பெற்றுக் கொண்டார் என “நாங்கள் 6” இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தவறுதலாக “யோகா”வின் பெயர் தவறவிடப்பட்டுள்ளது. அவருக்கு 5 பெண் பிள்ளைகள் பிறந்தார்கள்.

- தகவல் - க.வரதவேல்

## குறிச்சி 4

# இயவராந்தோட்டம்

■ செல்லக்குட்டி கணேசன்

எமது கிராமத்தில் காணப்படுகின்ற குறிச்சிகளில் பெரும்பாலானவை இடுகுறிப்பெயர் களையும், சில குறிச்சிகள் காரணப் பெயர்களையும் கொண்டமைந்தவையாகும். அவ்வாறான காரணப் பெயர்களை கொண்டமைந்த குறிச்சிகளுள் இயவராந்தோட்டம் குறிச்சியும் ஒன்றாகும். இக்குறிச்சி யானது எமது கிராமத்து பிரதான வீதிகளில் ஒன்றான மாதாங்கோயில் வீதி தொடங்குகின்ற கொக்கட்டியா வளவு வைரவர் கோயில் சந்தியில் இருந்து நேர் மேற்காக 200 மீற்றர் தொலைவிலும் கொக்கட்டியாவளவு வெட்டுக்கிணற்றடிக்கு நேர் தெற்காக 50 மீற்றர் தூரத்திலும் கொக்கட்டியாவளவு கதிரவேல் அகிலேஸ்வரன் வீட்டிற்கு கிழக்கு பக்கமாக அமைந் துள்ள ஒழுங்கையை மேற்கு எல்லையாக கொண்டமைந்துள்ள நிலப்பரப்பாகும்.

இந்நிலப்பரப்பில் 600(அறுநூறு) வருடங் களுக்கு முன்னர் குயவர் சமூகத்தினர் வாழ்ந்து வந்ததாகவும் அதற்கான சுவடுகள் அவ்விடத்தில் இன்றும் காணப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது. இதனை தொல்பொருள் ஆய்வு நிறுவனம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை “நாங்கள்” பத்திரிகையூடாக கேட்டுக் கொள் கின்றோம்.

குயவர் சமூகத்தினர் இவ்விடத்தில் வாழ்ந்து தமக்கான தொழிலை இவ்விடத்திலே மேற்கொண்டு வந்ததனால் இவ்விடம் குயவராந்தோட்டம் என்ற காரணப்பெயரைப் பெற்றுள்ளது. எனினும் கால வோட்டத்தில் குயவராந்தோட்டம் மெல்ல மெல்ல மருவி இயவராந்தோட்டம் என்ற நாமத்துடன் இன்றுவரை பேசப்பட்டு வருகின்றது. இக்குறிச்சியில் வாழ்ந்த முன்னோர்களின் வழித்தோன்றல்கள் அவ் விடத்தைச் சூழவுள்ள நிலப்பரப்புகளை கொள்வனவு செய்து புதிதாக வீடு அமைத்து வாழ்ந்து வருகின்றார் கள். இதனால் இக்குறிச்சியில் காணப்பட்ட வீடுகள் யாவும் சிதைந்து வெறுமையான வளவாகவுள்ளன. எமது கிராமத்தில் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்ட கல் வீடுகளில் இக்குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் குழந்தை செல்லம்மா தம்பதிகளின் வீடும் ஒன்றாகும்.

இக்குறிச்சியில் செல்லம்மா, தங்கம்மா, பொன்னம்மா ஆகியோரின் பெற்றோரும், அன்னம்மா, சிவலக்சுமி(சிவப்பிள்ளை) ஆகியோரின் பெற்றோரும் நகைச்சுவை நடிகர் அப்பாண்ணை என்று அழைக்கப் படுகின்ற வீரசிங்கம் அவர்களுடைய பெற்றோரும், சிதம்பரம்(பெண்) என்பவரின் பெற்றோரும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் எல்லோரும் தாய் வழி, தந்தைவழி உறவைக் கொண்டவர்களாவார்.

செல்லம்மா என்பவர் குழந்தை என்பவரை மணம் புரிந்து செல்வரத்தினம்(பெண்), ஸ்ரீஸ்கந்தராசா, ஆறுமுகம் (இரத்தினசிங்கம்) ஆகியோரை மக்கட் செல்வங்களாகப் பெற்று இயவராந்தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தார்கள். அதேபோன்று அன்னம்மா விஜயலிங்கம்(சோமு) என்பவரை மணம் புரிந்து விஜயவேணி, விஜயநாதன், விஜயலக்சுமி, விஜயராசா, விஜயசோதி ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்று அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார்கள். இவர்களை போன்று யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த மேசன் பொன்னையா இக்குறிச்சியிலே மணம் புரிந்து திருநாவுக்கரவு, குகதாசன், குமாரசாமி ஆகியோரை மக்கட் செல்வங்காகப் பெற்று இக்குறிச்சியிலேயே வாழ்ந்து வந்தார்கள். பொன்னையாவின் மனைவி காலமானதும் அக்குறிச்சியில் வாழ்ந்து வந்தவரான சிதம்பரம் என்பவரைத் (குழந்தைகளின் நலனுக்காக) திருமணம் செய்து தனது ஊரான யாழ்ப்பாணம் அரியாலையில் குடியேறினார். பொன்னையா சிதம்பரம் தம்பதியினருக்கு முறையே நவநீத பாலன்(மேசன் நவம்), உமாபாலன்(பிரான்ஸ்), உதயபாலன்(அமரர்), நகுலேஸ்வரி(வள்ளி ஜேர்மன்), சிவபாலன்(குட்டி பிரான்ஸ்) ஆகியோர் மக்கட் செல்வங்களாவர். இதே போன்று அப்பாண்ணை என்று அழைக்கப்படுகின்ற வீரசிங்கம் என்பவர் அல்வாய் வடக்கு “ஓடை” குறிச்சியைச் சேர்ந்த அமரர் பழனி தம்பதிகளின் மகள் பொன்னம்மாவை மணம் முடித்து ஒரு ஆண் குழந்தையை வாரிசாகப் பெற்றனர். அவர்தான் ஓடையான் என்ற குறிச்சிப் பெயரால் அழைக்கப்படுகின்ற நவரத்தினம் ஆவார். இவர் தனது தாய்க்குறிச்சி ஓடையில் மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

அக்குறிச்சியில் பிறந்து வளர்ந்த தங்கம்மா, (திருமதி மயிலு), பொன்னம்மா(திருமதி மார்க்கண்டு), சிவலக்சுமி(சிவப்பிள்ளை)(திருமதி பொன்னையா) ஆகியோர் எமதூரின் வெவ்வேறு குறிச்சிகளில் வீடு கட்டி வாழ்ந்த வந்து அமரரானர்கள். தற்போது அக்குறிச்சியில் வாழ்ந்து வந்த முன்னோர்களின் வழித்தோன்றல்களான குகதாசன் விஜயவேணி குடும்பத்தினர்.திருநாவுக்கரசு செல்வநாதன் குடும்பத்தினர், ஸ்ரீஸ்கந்தராசா சிவசங்கர் குடும்பத்தினர், விஜயநாதன் இராசரத்தினம் குடும்பத் தினர் அச்சூழலில் புதிதாக வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள்.

சயந்தலிங்கம் இலட்சுமி தம்பதியினருக்கு 2021.6.23 அன்று சாருகீதன் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

ஈழகேசரி, ஞாயிறு 26.9.1946 மேற்பிரிவுப் பரிசுக் கட்டுரை

# எனது கிராமம் அல்வாய்

■ வேத. தணிகாசலம்

#### நிலையம்

வடமராட்சிப் பகுதியிலுள்ள கட்டைவேலிக் கிராமச் சங்கத்தைச் சார்ந்த கிராமங்களில் அல்வாயும் ஒன்று. எனது கிராமம் வடக்கே பாக்கு நீரிணை என்ற கடலையும், கிழக்கே தம்பசிட்டி, புலோலி மேற்கு என்பன வற்றையும், தெற்கே காவெட்டி வடக்கைச் சார்ந்த வதிரியையும் துன்னாலை வடக்கையும், மேற்கே பொலிகண்டி, கொற்றாவத்தை என்பவைகளையும் எல்லைகளாகக் கொண்டிருக்கின்றது. இக்கிராமம் சுமார் 22 சதுரமைல் விஸ்தீரணமுடையது. இது தெற்கு, வடக்கு, மேற்கு என்று பிரிக்கப்பட்டு 3 விதானை மாரைக் கொண்டுள்ளது. இக்கிராமச் சனத் தொகை சுமார் 4500 ஆகும்.

#### வரலாறு

நமது யாழ்ப்பாணம் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களாலே பூர்வ காலத்திற் குடியேற்றப்பட்டது. அதனால் தென்னிந்தியாவிலுள்ள பல கிராமப் பெயர்கள் யாழ்ப்பாணத்திலும் வழங்கப்பட்டு வருகின்றன. திருவாங்கூரிலே அல்வாய் என்ற கிராமம் இப்பொழுதும் இருக்கின்றது. எனவே அங்கிருந்து வந்தவர்கள் தான் முதன் முதலில் இப்பகுதியிற் குடியேறியபடியால் “அல்வாய்” என்னும் இப்பெயர் அமைந்திருக்கலாமென்று எண்ணுவது பொருத்தமே யாம். அல்லது கடலருகே மிகவும் நெருங்கிய ஊராயிருப்பதினால் அந்தக் காலத்தில் “அலைவாய்” என் னும் பெயரைப் பெற்றுக் காலகதியில் “அல்வாய்” என மருவியிருக்கவுங் கூடும்.

#### தொழில்

எனது கிராமத்திற் பெரும்பாலான சனங்கள் கமத்தொழிலையே செய்து வருகின்றார்கள். இங்கே புகையிலையும், வெங்காயமும் அதிகமாகப் பயிரிடப் படுகின்றன. பெரும்பாலான பள்ளர் சமூகத்தவர்கள் கருப்ப நீர், கள் என்பவற்றைச் சேர்க்கிறார்கள். கருப்ப நீரிலிருந்து பனங்கட்டி செய்தலையும் பனையோலை யிலிருந்து பாய், பெட்டி இழைத்தலையும் பள்ளர் சமூகப் பெண்கள் தம்முடைய சிறந்த குடிசைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

#### சந்தை

இக்கிராமத்தில் “மானாண்டி”ச் சந்தை எனப் படும் ஓர் அங்காடி மாத்திரம் இருக்கின்றது. வடமராட் சிச் சந்தைகளுள்ளே இங்கே தான் பெருந்தொகையான பாய், பெட்டி, பனங்கட்டி, வெண்காயம் என்பன வற்றைப் பெற முடியும். இச் சந்தையில் ஒரு சிறிய அரசினர் வைத்தியசாலையும் உண்டு. இச்சந்தை நெல்லியடியிலிருந்து வடக்கே ஒன்றரைக் கட்டை தூரத்திலும், கடற்கரையிலிருந்து தெற்கே முக்காற் கட்டை தூரத்திலும் அமைந்திருக்கின்றன.

#### ஆலயங்கள்

ஒரு கத்தோலிக்க ஆலயமும் ஒரு புரட்டஸ் தாந்து ஆலயமும் பல சைவாலயங்களும் இக்கிராமத்தில் இருக்கின்றன. சைவாலயங்களுள் “வேவிலந்தை முத்துமாரியம்மன் கோயில்”பலராலும் பக்தியோடு வணங்கப்படும் சிறந்த ஆலயமாகும். மேலும் ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன்னதாகவே பள்ளர் சமூகத்தவர்களாற் கட்டப்பட்டு நடைபெற்று வரும் 3 பிள்ளையார் கோயில்களும் இக்கிராமத்தில் இருக் கின்றன. இவைகள் இப்போதும் பிராமணர்களின் பூசை யுடன் சைவாசார முறைப்படி நடைபெற்று வருகின்றன.

#### கல்வி நிலை

எனது கிராமத்திலே 3 சைவப் பாடசாலைகளும் 3 புரட்டஸ்தாந்துப் பாடசாலைகளும் ஒரு கத்தோலிக்கப் பாடசாலையும் இருக்கின்றன. பள்ளர் சமூகத்தினராற் சிறப்புற நடத்தப்பட்டுவரும் வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலையும் இக்கிராமத்தைச் சேர்ந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஆங்கிலம் கற்ற பலர் ஆங்காங்கே உத்தியோகங்களில் இருக்கின்றார்கள். உடுப்பிட்டி ஸ்ரீ. சிவசம்புப்புலவரிடத்திற் படித்த தமிழறிஞர் ஆறுமுகம் நொத்தாரிசு அவர்களும் இக்கிராமத்திலேயே வாழ்ந்தனர்.

#### சரித்திர சின்னங்கள்

மாயக்கை வயல் என்னும் பகுதியில் தெற்குப் புறமாகத் “துலுக்கன் கோட்டை” என்று சொல்லப்படும் கற்பார் அமைந்த மேடு ஒன்று எனது கிராமத்தில் இப்பொழுதும் இருந்து வருகின்றது. அக்காலத்திலே துலுக்க (சோனக)ராற் கட்டப்பட்ட ஒரு கோட்டையின் சிதைவே இது வென்றும், இங்குள்ள ஒரு சுரங்கப்பாதை தெற்கு நோக்கிச் செல்வதாகவும் பலர் சொல்கிறார்கள். ஆதலின் இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் துலுக்கன் கோட்டையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தின் சரித்திர உண்மைகள் பலவற்றை அறியலாம். இது பருத்தித்துறையிலிருந்து ஒன்றரைக் கட்டை தூரத்திலே தென்மேற்குத் திசையிலே இருக்கின்றது.

இற்றைக்கு ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன்னே ஐரோப்பிய வர்த்தக சங்கத்தாரால் நடத்தப் பட்ட சீனித் தொழிற்சாலைக்குரிய சிதைந்த கட்டடங் களும் அகன்ற ஆழமான கேணி ஒன்றும் அல்வாய் மேற்கிலே பொலிகண்டிக் கடற்கரைக்கு அண்மையிலே இப்பொழுதும் காணப்படுகின்றன. இத்தொழிற்சாலை தகுந்த முறையில் நடைபெற்று வருமானால் இலங்கை முழுவதிற்கும் தேவையான சீனியை இத்தொழிற் சாலை இன்று கொடுக்கத்தக்க தாக இருக்கும்.

#### சமூக முன்னேற்றம்

இக்கிராமத்திற் சமூகத் துவேஷங்கள் வர வா அருகிவருகின்றன. உயர் சாதி யாரும் ஹரிசனங்களும் ஒரு வருக்கொருவர் அன்புடைய வர்களாகிச் சமூக சீர்திருத் தங்கருதி ஆக்க வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். கட்டைவேலிக் கிராமச்சங்கத்திற் பள்ளர் சமூகத்தவர் ஒருவர் அங்கத்தவராகவும் தெரியப்பட்டிருக்கிறார். சமூக முன்னேற்றக் கருதி இங்குள்ள ஹரிசன மக்களால் தூதன் என்னும் மாதப் பத்திரிகையொன்றும் சிலகால மாக வெளிவருகின்றது!

# அந்தமண்! எங்கள் சொந்தமண்!

கடலலை தரைதொடு விரிகுடா எழில்
கொடிபல பறந்த எம் யாழ்கோட்டை!
தமிழ் மன்னர் செறிந் தாட்சிகொள்
தமிழர் தாயகமாய் விளங்கும் யாழ்ப்பாண
வடபால் அமைந்த வளமிகு பூமி!
வடமராட்சி! அந்தமண்! எங்கள் சொந்தமண்!
விடைபெற முடியாது விட்டுநாம் வந்தே
விதியிது வாழ்வென வாழுகின் றோமே!

வல்லவரை வெல்லுனரை வாரியெமக் களித்து!
வானமளந்த தனைத்தும் அறிந்த வடமராட்சி!
பாக்கு நீரிணையை பக்கம் வைத்தாய்!
பசுமைசேர் பயிர்களெல்லாம் உன்மேல் கொண்டாய்!
ஓங்கியெழும் கடலையும் உகந்தநல் காற்றும்!
உயர்ந்த வளர் பனைமரமும் ஓலைக்கீற்றும்!
சேர்ந்தநல் வளங்களெலாம் சிரத்திற் கொண்டே!
சேமமுறநாம் வாழத் தக்கவழி தந்தாய்!

அழகான பலநல ஊர்கள் எல்லாம்
அடிவயிற்றில் சுமந்துநல் லின்பம் கொண்டாய்!
அரியபல கல்லூரிகளை ஆரத் தழுவி!
அறிவுசால் மக்களை மேதினிக் களித்தாய்!
குவலயத்தார் கும்பிட்டுக் குலவிடும் கோயில்கள்!
கோபுரக் கலசங்கள் அதன்மேற் கொண்டாய்!
நீலப் பாய்விரிப்பில் மிதந்துவரும் கப்பலெல்லாம்!
நின்றிளைப் பாறிடும் துறைமுகம் கொண்டாய்!

வல்வையெம் பதிக்கு வரம்மிகக் கொடுத்தே!
தொல்லையறு மைந்தரைத் தோன்றிடச் செய்தாய்!!
வேலவன் தன்வேல் கொண்டு வினையறுத்தே!
வெல்லும் நம்தமிழை வேண்டி நீ நின்றாய்!
கதிரவன் வரவால் காட்சியுறும் காசினியின்!
கடல் மணற்பரப்பில் கடுந்தவம் புரிகின்றாய்!
மனமிசை மாண்புறு நின்மா தவத்தினால்!
மின்னொளி வடிவாய் மன்னவன் தோன்றட்டும்!

கொடும்போர் இடரினால் வேரறுந்து வந்தோம்!
கடும்பனிக்குளிரினுள் காலடி பதித்தோம்!
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"!
யாமறி கணியன்சொல் நாமிங்கு இணைந்தோம்!
அல்வாய், வதிரி, கொற்றாவத்தை அயலூர்!
அன்பர்கள் அனைவரும் அன்பால் இணைந்தே!
"கேளிர் ஒன்றியம்" எனும்குடை நிழலில்!
கூடுவோம் கோடை, குளிர் காலங்களில்!

பகலவனாட்சி சிறிதேயான பனிமலர்தூவும் குளிர்காலம்!
பருத்திப்பூக்கள் வெடிப்பதனால் பறந்தேவீழ்ந்த பஞ்சினைப்போல்
பரந்துவிரிந்த வீதியெலாம் பனிப்போர்வையுள் படுத்திருக்கும்!
நம்மவரில்லம் மகிழ்ச்சியுறும் நத்தார்வருடப் பிறப்புக்காய்!
நல்கலைநிகழ்வைக் காண்பித்தே கேளிர்மாந்தரும் களிப்புறுவர்!

பசிக்கினிய போசனம், ருசிக்கினிய சிற்றுண்டிகள்
பரிசின்பாலதன் போட்டிகள், பார்வைக்குகந்த நடனங்கள்
செவிக்கினிய ஓசைதனில் தேனமுதாய் நல்கானங்கள்
சிந்தைசேர் உரைகள், சிறார்விரும்பும் நத்தார்தாத்தர்
அவனியீர் ஆக்கம்பலகொள் ஆண்டிதழும் மலர்ந்திடுமே!

சூரியக் கதிர்வீச்சில் சுட்டெரிக்கும் வெயில்காலம்!
சுதந்திரமாய் ஆடைகுறைத்துச் சுற்றிவரும் கோடைகாலம்!
முற்றத்தில் நட்டரோஜா மலர்மணம் வீசுங்காலம்!
முகமலர மழலையெலாம் முன்தரையில் விளையாடுங்காலம்!
மாணவரின் விடுமுறையில் பார்த்தொருநாள் நாம்கூடும்காலம்!

பசுந்தரைப் பூங்காவில் பரந்திருக்கும் மரநிழலில்!
பக்குவமாய் அடுப்படுக்கி வாணலில் இறைச்சிவாட்டி!
குண்டாளத்தில் குழைசோறும் குடிக்கநல் ஒடியல் கூழும்!
கொத்தாய் ரொட்டிவெட்டித் தட்டில்தாளம் போட்டே!
கொத்து ரொட்டிதனைக்குதூகலமாய்ப் பரிமாறுவோம்!

வட்டவட்டத் தோசையுடன் வர்ணம்சேர் சம்பல்செய்து!
வரிசைபேணி நிற்போர்க்கு வார்த்தெடுத்து வழங்கிடுவோம்!
வேண்டித்தேனீர் கேட்போருக்கு விருப்புடன் அளித்திடுவோம்!
இனியநல் பானங்களுடன் இன்சுவைக்கனிகள் உண்டு!
ஈடில்லா நட்பில் இணைந் தின்புறுவோம்!

போட்டிகளின், சீட்டிகளின் புத்துணர்வில் ஓட்டங்களும்
பாலர்க்காய்ப் பந்துகளும், பாய்ந்துபொறுக்க இனிப்புகளும்
பன்மப் பருவத்தோர் ஊதியுடைக்கப் பலூன்களும்
கண்கட்டி உடைத்தலும் கயிறிழுப்பில் வீரியமும்
களிப்பிலெமை ஆழ்த்திடும் காட்சிகளிவை ஆகும்!

வாழ்தலுக்கும் வீழ்தலுக்கும் அப்பால் வளையாதிருக்கும்!
வாழ்தலில் வலிமைகொள் வானுயர் பனைமரம்!
வளர்நிறை தேசத்தின் பிறப்புரிமை பெற்றநாம்!
வானத்தின் எல்லைவரை வாழ்ந்திடினும் எங்கள்!
உதிரமண் விடியலின் வரம்வேண்டி வாழ்வோமே!

- செல்வரத்தினம் அனுஷா

# தமிழின்பம்

மலையிற் பிறந்த மணியே - இசை
மழையில் வளர்ந்த பயிரே
கலையிற் கனிந்த கதிரே - முற்
காலத் துதித்த தமிழே!

குழையும் குரல்கொள் குயிலே- திருக்
குறளிற் குளிர்ந்த குகையே
விழையும் விவேக விதியே - தினம்
விளையும் வினோத விழியே!

தழையும் தகுந்த தருவே - முச்
சங்கச் சபைக்குத் திருவே
பழைதப் பதங்கொள் பரிசே - சேர
பாண்டியன் சோழன் பலமே!

உயிரும் உயிர் மெய் தனிமெய் - ஆய்தம்
ஓங்கிப் பரக்கும் உருவே
பயிலும் பசும் பொன் மொழியே - இளம்
பருவம் பரந்த தமிழே!

வலினம் இடையு மெலினம் - மெய்
வளர்ந்தே வளங்கொள் வடிவே
எளிமை இதஞ்செய் இனிமை - நிறை
இசைந்தே இலங்கும் இயலே!

கவிஞர் உளத்தின் நிலையே - உயர்
கம்பன் வளர்த்த கலையே
புவியிற் பொலிந்த புகழே - எழில்
பூத்துக் குலுங்கும் பொருளே!

- வே. ஐயாத்துரை

# தம்பி

தம்பி நல்ல தம்பி
தவழும் சின்னத்தம்பி
தும்பி பிடிக்கப் போனால்
துரத்திப் போட்டு வருவான்

மண்ணை அள்ளி எறிவான்
கண்ணைக் கசக்கி அழுவான்
தூக்கி மடியில் வைத்தால்
தூங்கித் தூங்கி விழுவான்

தூக்கம் குழம்பிப் போனால்
தூக்கச் சொல்லி அழுவான்
அக்கா பாடிச் சிரித்தால்
அவனும் சேர்ந்தே சிரிப்பான்.

- பவானி பிரபானந்தன்

# நாடற்றவரா நாம்

வாழ வழியில்லை இன்று - இங்கு
வந்தேறு குடிகளால்
சோளப் பொத்திகளா - நாம்
சூறைக் காற்றில் சாய்ந்து விட
மூவேந்தர் வழி வந்தோம் - முன்பு
இமயத்தில் கொடி வைத்தோம்
நாற்றிசையும் நடுநடுங்க - நம்மவர்
செங்கோலோச்சிய நாளுமுண்டு
குட்டக் குட்டக் குனிந்திடோம் -ஒருநாள்
குன்றினில் உள்ள நெருப்பாவோம்
நாடற்றவரா நாம் என்பதை
எதிர் காலத்தில் காட்டிடுவோம்.

-ந.செல்வரத்தினம்